22.09.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாம்பனில் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில் சிக்கிய பால் சுறா மீன்கள்



ராமேஸ்வரம், : ராமேஸ்வரம் அருகே பாம்பன் நாட்டுப்படகு மீனவர்கள் வலையில், 'பால் சுறா' மீன்கள் சிக்கின.பாம்பனில் இருந்து கடந்த செப்., 20ல், நுாற்றுக்கும் அதிகமான நாட்டுப்படகுகளில் மீன்பிடிக்க சென்ற மீனவர்கள், நேற்று கரைக்கு திரும்பினர். இதில் 5 க்கும் அதிகமான நாட்டுப்படகுகளில் ஒரு டன் எடையில் பால் சுறா மீன்கள் சிக்கி இருந்தன. ஒவ்வொன்றும் 2 அடி நீளத்தில் 2 முதல் 2.5 கிலோ வரை எடையுடன் இருந்தன. அவற்றை ஒரு கிலோ ரூ. 220 க்கு வாங்கிய மீன்

வியாபாரி ஒருவர், ஐஸ் பெட்டியில் பதப்படுத்தி கோவை, பொள்ளாச்சி மீன் மார்க்கெட்டுகளுக்கு அனுப்பினார்.

மருத்துவ குணமுள்ள பால் சுறா மீன்கள், அழிவின் விளிம்பில் உள்ளதால், கடலில் அதிகம் காணப்படுவதில்லை. இதனால் மீனவர்கள் வலையில் சிக்குவதும் இல்லை. 6 அடி நீளத்தில் 100 கிலோவுக்கு மேல் வளரக் கூடிய இம்மீன்களின் துடுப்பு(துாபி) மருத்துவ ஆய்வு கூடத்துக்கு பயன்படுவதால், அவற்றை தனியாக வெட்டி எடுத்து ஒரு கிலோ ரூ.5 ஆயிரத்துக்கு மேல் விற்கப்படுகிறது. இம்மீன்களை பிரசவமான பெண்கள் சாப்பிட்டால், தாய்ப்பால் அதிகம் சுரக்கும் எனவும், அவர்களுக்கு இடுப்பு வலி குறையவும் வாய்ப்பு உள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

திமிங்கல சுறா, பால் சுறா, ஈட்டிபல் சுறா, கங்கை சுறா, சிறுபல் சுறா மீன்களை பிடிக்க மத்திய அரசு தடை விதித்து இருந்தாலும், தற்போது சிக்கியுள்ள பால் சுறா மீன்கள், வேறு இனத்தை சேர்ந்தவை என்பதால் இவற்றை பிடிக்கத்தடை இல்லை எனவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

## கபினியில் 4,000 கனஅடி நீர் திறப்பு

மேட்டூர்: கர்நாடக அரசு, கபினி அணையில் இருந்து, 4,000 கன அடி தண்ணீர் திறந்து விட்டதை அடுத்து, மேட்டூர் அணைக்கான நீர்வரத்து, 4,500 கன அடியாக உயர்ந்துள்ளது.கர்நாடகாவின் கபினி அணையில் இருந்து, இரு நாட்களுக்கு முன், வினாடிக்கு, 4,000 கனஅடி நீர் காவிரியாற்றில் திறக்கப்பட்டது. இந்நீரின் ஒரு பகுதி, கபினியில் இருந்து, 241 கி.மீ., தொலைவில் உள்ள, மேட்டூர் அணையை, நேற்று மாலை வந்தடைந்தது.இதனால், நேற்று காலை வினாடிக்கு, 1,114 கனஅடியாக இருந்த அணையின் நீர்வரத்து, நேற்று மாலை வினாடிக்கு, 4,500 கன அடியாக அதிகரித்தது.நேற்று, அணை நீர்மட்டம், 68 அடியாகவும், நீர்

இருப்பு, 31.814 டி.எம்.சி.,யாகவும் இருந்தது. கபினி அணையில் திறக்கப்பட்ட, 4,000 கனஅடி நீர் வந்தாலும், மேட்டூர் அணையில் இருந்து வினாடிக்கு, 13,800 கனஅடி நீர் பாசனத்துக்கு வெளியேற்றுவதால், வரும் நாட்களிலும் மேட்டூர் அணை நீர்மட்டம் மேலும் குறையும்.

## மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு

மேட்டூர் : கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்பட்ட நீரால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1,114 கனஅடியிலிருந்து 6,197கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.16 அடியாகவும், நீர் இருப்பு 31.14 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 800 கனஅடி நீரும் திறக்கப்பட்டது.

## கர்நாடக அணைகளிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறப்பு

மைசூரு : கர்நாடகாவின் கபினி, கிருஷ்ணராஜசாகர் அணைகளிலிருந்து தமிழகத்திற்கு தண்ணீர் திறக்கப்பட்டது. கிருஷ்ணராஜசாகர் அணைகயிலிருந்து 4,500 கனஅடி நீரும், கபினியிலிருந்து 4,000 கனஅடி நீரும் திறந்துவிடப்பட்டுள்ளது.

## புலிகள் காப்பகங்களுக்கு தனித்தனி 'லோகோ'



தமிழகத்தில் உள்ள புலிகள் காப்பகங்களுக்கு தனித்தனியாக, 'லோகோ' எனப்படும், இலச்சினையை உருவாக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. அடர்த்தியான காடுகளில் தான் புலிகள் வாழும் என்பதால், அவற்றின் எண்ணிக்கை அதிகரிப்பை, மாநிலங்கள் பெருமையாக கருதுகின்றன. தமிழகத்திலும், புலிகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. கடந்த, 2007ல் - 76; 2010ல் - 163; 2014ல் - 229 என, புலிகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. தமிழகத்தில், முதுமலை, களக்காடு - முண்டந்துறை, ஆனைமலை மற்றும் சத்தியமங்கலம் என, நான்கு புலிகள் காப்பகங்கள் உள்ளன.

அவற்றை மேம்படுத்தும் பணிகளின் ஒரு பகுதியாக, ஒவ்வொன்றுக்கும் தனி அடையாளத்தைத் தரும் வகையில், 'லோகோ'வை உருவாக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. அதற்கான, 'டிசைன்'களும் தயாரிக்கப்பட்டுள்ளன. வனத்துறை வட்டாரங்கள் தெரிவித்ததாவது:பெரிய நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுக்கு, 'லோகோ' இருப்பது போல், புலிகள் காப்பகங்களையும், பார்த்தவுடன் அடையாளம் கண்டுபிடிக்கும் வகையில் பிரத்யேக, 'லோகோ' உருவாக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. நாட்டில் உள்ள பெரும்பாலான புலிகள் காப்பங்களுக்கு, 'லோகோ'

உள்ளது; தமிழகத்தில் தான் இல்லை. அதற்காக, டிசைன்களை அந்தந்த காப்பக அதிகாரிகளின் ஒத்துழைப்புடன் தயாரித்துள்ளோம். அவற்றை, அரசின் ஒப்புதலுக்காக அனுப்பியுள்ளோம்; முதல்வர் ஒப்புதல் கொடுத்த பின் வெளியிடப்படும்.இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

**குடிநீரை தேடி அலையும் வனவிலங்குகள்.பரிதாபம்:காடுகளில் வறண்டுபோன நீர்தேக்க குட்டை**

தியாகதுருகம்:தியாகதுருகம் சுற்றியுள்ள வனப்பகுதியில் உள்ள நீர்நிலைகள் தண்ணீர் இன்றி வறண்டு கிடப்பதால் வனவிலங்குகள் குடிநீரை தேடி வெளியே வருவது, மீண்டும் அதிகரித்துள்ளது.தியாகதுருகம் அடுத்த பொரசக்குறிச்சி, வேளாக்குறிச்சி, கூத்தக்குடி, சிறுநாகலூர், குடியநல்லூர் உள்ளிட்ட பகுதியில் வனப்பகுதி அமைந்துள்ளது. இதில் பெரும்பாலான பரப்பில் இயற்கை காடுகள் அழிக்கப்பட்டு யூக்கலிப்டஸ் மரம் வளர்க்கப்பட்டு வருகிறது.குறிப்பிட்ட பகுதியில் மட்டுமே காப்பு காடு அமைந்துள்ளது. இங்கு மான், மயில், நரி, முயல், காட்டுபன்றி உள்ளிட்ட வனவிலங்குகள் வாழ்ந்து வருகின்றன. இவைகளின் குடிநீர் தேவைக்காக வனத்துறை சார்பில் தண்ணீர் குட்டை அமைக்கப்பட்டுள்ளது. கடந்த 3 ஆண்டுகளாக போதிய மழை இன்றி வறட்சி நிலவுவதால் வனவிலங்குகளுக்கு குடிநீர், உணவு கிடைப்பதில் சிக்கல் நீடித்து வருகிறது. இதன் காரணமாக வனவிலங்குகள் காடுகளை ஒட்டியுள்ள விளைநிலங்களுக்கு உணவு, தண்ணீர் தேடி செல்வது தொடர்கிறது.விலங்குகள் பயிர்களை சேதப்படுத்துவதால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. காடுகளை விட்டு வெளியேசெல்லும் வனவிலங்குகளின் உயிருக்கு பலவகையிலும் ஆபத்து ஏற்படுவது வாடிக்கையாக உள்ளது. வேட்டையாடுவதாலும், நாய்கள் கடிப்பது, மின்வேலியில் சிக்குவது, பாசன கிணற்றில் விழுவது

உள்ளிட்ட காரணங்களால் மான், காட்டு பன்றிகளின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

கடந்த வாரம் எஸ். ஒகையூரில் தண்ணீர் தேடி சென்ற மான் ஒன்று ,காயங் களுடன் சாலையோரம் இறந்து கிடந்தது. வனப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ள குட்டைகள் வறண்டு கிடப்பதால், உயிரை பணயம் வைத்து தண்ணீர் தேடி காடுகளை விட்டு விலங்குகள் வெளியே செல்லும் பரிதாப நிலை நீடித்து வருகிறது. இதற்கு தீர்வாக சிமென்ட் தொட்டிகளை அமைத்து, அதில் டேங்கர் லாரிகள் மூலம் தண்ணீர் தேக்கிவைத்து விலங்குகளின் தாகம் தீர்க்க வனத்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## ரோட்டை கடக்கும் வன விலங்குகளை சீண்டினால் சீண்டும்! பயணிகளுக்கு வனத்துறை எச்சரிக்கை

உடுமலை: 'மூணாறு செல்வோர், ரோட்டில் வாகனங்களை நிறுத்தி, வன விலங்குகளுக்கு தொந்தரவு தரும் செயலில் ஈடுபட்டால், கடும் நடவடிக்கை எடுக்கப்படும்,' என, வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

உடுமலையில் இருந்து, கேரள மாநிலம் மறையூர், மூணாறுக்கு உணவுப்பொருட்கள், காய்கறிகள் உள்ளிட்ட அத்தியாவசிய பண்டங்கள் கொண்டு செல்லப்படுகின்றன. இதற்காக இருமாநில வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் நாள்தோறும், உடுமலை - மூணாறு, மூணாறு - உடுமலைக்கு வந்து செல்கின்றனர்.

சின்னாறு, மலைவாழ் கிராமங்கள், கேரளாவின் மறையூர், காந்தலூார், கோவில்கடவு, தலையாறு மற்றும் மூணாறு உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்தவர்களுடன், சுற்றுலா பயணிகளும் அதிகளவில் மூணாறுக்கு சென்று வருகின்றனர். ஆனைமலை புலிகள் காப்பகம், உடுமலை,

அமராவதி வனச்சரகங்களுக்கு இடையில், உடுமலையிலிருந்து சின்னாறு, மறையூர் வழியாக மூணாறு செல்லும் ரோடு உள்ளது.

இந்த ரோட்டில், புங்கன் ஓடை, காமனுாத்து, 'எஸ்' வளைவு உட்பட பல்வேறு இடங்களில், யானை உள்ளிட்ட வனவிலங்குகள் ரோட்டை கடந்து அமராவதி அணைக்கு செல்கின்றன.

உடுமலை வனச்சரகத்தில், வனவிலங்குகளின் முக்கிய நீராதாரமாக இருப்பது அமராவதி அணை மட்டுமே. வனப்பகுதியில் இருந்து அணைக்கு செல்ல, இவ்விலங்குகள் உடுமலை - மூணாறு ரோடு, புங்கன் ஓடை, 'எஸ்' வளைவு உள்ளிட்ட குறிப்பிட்ட சில இடங்களில், சாதாரணமாக கடந்து சென்று தண்ணீர் தேவையை தீர்த்து வருகின்றன.

கார், வேன், சுற்றுலா பஸ், இரு சக்கர வாகனங்களில் பயணிப்போர், இயற்கை அழகை ரசிக்க, மூணாறு ரோட்டில் ஆங்காங்கே தங்கள் வாகனங்களை நிறுத்துகின்றனர்.

வனவிலங்குகள் ரோட்டை கடந்து, வனத்தின் மறு பகுதிக்கு செல்லும்போது, அவற்றின் வழித்தடத்தை மறித்து வாகனங்களை நிறுத்துவதுடன், ஒருசிலர் யானைகளை சீண்டி, விளையாடுகின்றனர். இதனால், கோபமடையும் யானைகள், பயணிகளை தாக்க முற்படுகின்றன; வாகனங்களை சேதப்படுத்துகின்றன.

சம்பவம் நடந்து நீண்ட நேரமாகியும், பாதிப்புக்குள்ளான யானைகள் அந்த இடத்தை விட்டு நகராமல், அங்கேயே கூட்டமாக முகாமிடுகின்றன. இதனால், அப்பகுதியில் நடந்த சம்பவத்தை அறியாத பிற பயணிகள், ரோட்டை மறித்து யானைகள் நிற்பதைக்கண்டு அதிர்ச்சி அடைகின்றனர்.அவை ரோட்டை கடந்து செல்லும் வரை நீண்ட நேரம்

காத்திருக்கின்றனர்; சில நேரங்களில், அவ்வழியாக வரும் அனைத்து வாகனங்களையும் யானைகள் துரத்தி தாக்க முற்படுகின்றன; சுற்றுலா பயணிகள் கலக்கமடைகின்றனர். இப்பகுதியில், வனத்துறை சார்பில் வேட்டைத்தடுப்பு காவலர்கள் பணியமர்த்தப்பட்டு, கண்காணிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது.

சமீபகாலமாக வேட்டைத்தடுப்பு காவலர் பணியிடம் காலியாக உள்ளதால், கண்காணிப்பு பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. இதனால், சுற்றுலா பயணிகள் தங்கள் இஷ்டத்துக்கு வனப்பகுதிக்குள் வாகனங்களை ஆங்காங்கே நிறுத்தி, விலங்குகளை குறிப்பாக யானைகளை படம் பிடிப்பதும், அவற்றை சீண்டி விளையாடுவதுமாக உள்ளனர்.

**கண்காணிப்பு அவசியம்**

ஒரு சிலர் செய்யும் செயலால், அனைத்து தரப்பினரும் பாதிப்புக்குள்ளாவதை தவிர்க்கும் வகையில், வனத்துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும். யானை உள்ளிட்ட வன விலங்குகள் ரோட்டை கடக்கும் இடம் குறித்தும், அவை எப்போது வரும் என்பது குறித்தும் வனத்துறையினருக்கு ஓரளவு தெரிந்திருக்கும். போதுமான ஊழியர்கள் இல்லாத நிலையில், எச்சரிக்கை பலகைகள் வைத்து, விழிப்புணர்வு ஏற்படுத்தலாம். ரோந்து வாகனத்தில் தொடர் கண்காணிப்பு மேற்கொள்வது அவசியம்; வனவிலங்குகளை தொந்தரவு செய்வோர் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும், என, இயற்கை ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**'வனப்பகுதியில் பாதுகாப்பு ஏற்பாடு'**

வனத்துறை அதிகாரிகள் கூறியதாவது: வனப்பகுதி சாலையில் வாகனங்களை நிறுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியை

தொடர்ச்சியாக பயன்படுத்துவோர் தங்கள் பாதையில் பயணிக்கின்றனர். பிற பகுதிகளில் இருந்து, சுற்றுலா வருவோரில் ஒருசிலரே இதுபோன்ற செயலில் ஈடுபடுகின்றனர். குறிப்பாக, யானைகள் கூட்டமாக வரும்போது, அவற்றை பார்க்கும் ஆர்வத்தில், சத்தம் போடுவது, அவற்றின்மீது கையில் கிடைக்கும் பொருட்களை, சுற்றுலா பயணிகள் வீசுவதால், அவை கோபமடைந்து, துரத்துகின்றன. யானைகளை தொந்தரவு செய்யாதவரை, அவையும் தொந்தரவு செய்யாது. வனத்துறை சார்பில், வனப்பகுதியில் போதிய பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. வனப்பகுதி சாலைகளில், அத்துமீறி வாகனங்களை நிறுத்துவோரை எச்சரிப்பதுடன், அபராதம் விதித்தும் வருகிறோம். வனவிலங்குகளின் வழித்தடம் அருகே தீவிர கண்காணிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. வனவிலங்குகளை சீண்டுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு, அவர்கள் கூறினர்.

## ஞாபக சக்தியை அதிகரிப்பது எப்படி:சுகாதாரத் துறை இயக்குனர் விளக்கம்

புதுச்சேரி:மறதிநோய் உள்ளவர் கள், 'எண் கணிதம் விளையாடி, ஞாபக சக்தியை அதிகரிக்கலாம்' என, சுகாதாரத் துறை இயக்குனர் ராமன் பேசினார்.கதிர்காமம் இந்திரா காந்தி அரசு மருத்துவக் கல்லுாரியில், உலக மறதி நோய் தினத்தையொட்டி விழிப்புணர்வு கருத்தரங் கம் நேற்று நடந்தது. கல்லுாரி முதல்வர் கோவிந்த ராஜ் தலைமை தாங்கினார்.சுகாதாரத் துறை இயக்குனர் ராமன் பேசும்போது, 'இளமையில் சுறுசுறுப்பாக இருக்கும் மூளை, நாட்கள் செல்லச் செல்ல தனது இயல்பில் மாற்றம் அடைகிறது. வயதாகும்போது நமக்கு ஞாபக மறதி அதிகம் ஏற்படுகிறது. பொருட்களை எங்கு வைத்தோம் என, தெரியாமல் தடுமாறுகிறோம். இது போன்ற பிரச்னை உள்ளவர்கள், சிந்தனை சுடோகு போன்ற எண் கணிதம் விளையாடி தங்களுடைய ஞாபக சக்தியை அதிகரிக்கலாம்' என்றார்.ஊரக நலத்திட்ட இயக்குனர்

காளிமுத்து, புதுச்சேரி மனநல திட்ட அதிகாரி ஜவகர் கென்னடி, இந்திராகாந்தி மருத்துவ மனை மருத்துவ கண்காணிப்பாளர் மோகன்குமார், நலத்துறை தலை வர் பாலன், நரம்பியல் நிபுணர் சுரேஷ் உள்ளிட் டோர் கலந்து கொண்டனர்.

**பவானிசாகர் நீர்மட்டம் கவலைக்கிடம்: மழையை எதிர்பார்க்கும் விவசாயிகள்**

ஈரோடு: நீர்பிடிப்பு பகுதியில் மழையில்லாததால், பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கேள்விக்குறியாகி வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் பாயும் கீழ்பவானி வாய்க்கால் பாசனத்தில் (எல்.பி.பி.,), 2.07 லட்சம் ஏக்கர் பயன் பெறுகிறது. இப்பரப்பு இரண்டாக பிரித்து, முதல் போகத்தில், 1,03,500 ஏக்கருக்கு ஆக., 16ம் தேதி, இந்தாண்டுக்கான தண்ணீர் திறக்கப்பட்டது. வழக்கமாக நெல், தென்னை, கரும்பு, வாழை உள்ளிட்ட பயிர்கள் பயிரிடப்படும். தற்போது எல்.பி.பி.,யில், 2,300 கனஅடி வீதம், தண்ணீர் திறக்கப்படுகிறது. ஆனால் இதுவரை, கடைமடை பகுதியில் உள்ள மெயின் மற்றும் உப வாய்க்கால்களுக்கு நீர் சென்றடையவில்லை என்ற புகாரை விவசாயிகள் கூறி வருகின்றனர். பவானிசாகர் அணையின் நீர்மட்டம் கிடுகிடுவென கீழே இறங்கி செல்வதால், அனைத்து பாசன பகுதிக்கும் தண்ணீர் வழங்க முடியுமா? என்ற கேள்வி எழுந்துள்ளது. எல்.பி.பி.,க்கு பிரதானமாக உள்ள பவானிசாகர் அணையின் நீர்மட்டம் நேற்று மாலை, 69.25 அடியாக இருந்தது. நீர் பிடிப்பு பகுதிகளில் மழை இல்லாததால், 281 கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. பவானி ஆற்றில், 1,200 கனஅடி வீதமும், எல்.பி.பி.,யில், 2,300 கனஅடியும் தண்ணீர் திறக்கப்படுகிறது. எல்.பி.பி., பாசனத்துக்கு நாலரை மாதம் வரை நீர் வினியோகிக்க வேண்டும்.

தமிழக விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் பெரியசாமி கூறியதாவது: சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய், சென்னிமலை விரிவாக்க

கால்வாய், பவானி விரிவாக்க கால்வாய் கடைமடை பகுதிகளுக்கு, இதுவரை தண்ணீர் செல்லவில்லை. 1,500 ஏக்கர் நிலம் தரிசாக கிடக்கிறது. கடைமடைக்கு, இதுவரை நீர் செல்லாததற்கு மழையின்மை, வாய்க்கால் ஸ்திர தன்மை கெட்டு போனதே காரணம். இந்த வாய்க்கால் மிகவும் பழமையானது. மண் தன்மை மாறி உள்ளது. பிடிமானம் குறைந்துள்ளது. எனவே, கரைகள் மூலம் அதிகளவில் நீர் கசிவு ஏற்படுகிறது. முழு கொள்ளளவில் நீரை வினியோகித்தாலும் கூட, கடைமடைக்கு செல்லாததற்கு அதுவும் காரணம். நாற்று விட்ட பயிர்களை, 20 நாட்களுக்குள் வைக்க வேண்டும். சேறு அடிக்க கூட முடியாத நிலை, கடைமடை விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ளது. 15 நாட்களில் ஓரிரு கனமழை பெய்யாவிடில், நடவு செய்யப்பட்டுள்ள பயிர்களும், நீரின்றி காய்ந்து கருகி விட கூடும். பவானிசாகர் அணைக்கு குறைந்த அளவிலான நீரே வருகிறது. எனவே பயிர்களுக்கான தொடர் நீர் வினியோகம் கேள்விக்குறியாகி உள்ளது. இதனால் உற்பத்தி செலவு அதிகரிக்கும் சூழலில், நஞ்சை பயிரை நடவு செய்வது சிரமமாக உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

விவசாயி வெங்கடாசலம் கூறியதாவது: இந்தாண்டு தென்மேற்கு பருவ மழை ஏமாற்றியது. பருவம் இல்லாத போது மழை பெய்தது. இருமுறை கன மழை பெய்தால் ஓரளவு நிலைமை சீராகும். காட்டுக்காரர்களே, நீரை தடுத்து சேமிக்கும் நடவடிக்கையில் ஈடுபடுகின்றனர். எனவே, அனைவருக்கும் தண்ணீர் கிடைப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. பவானிசாகர் நீர்பிடிப்பு பகுதியில், போதிய மழை இல்லாததால், நீர் வரத்து குறைந்துள்ளது. முன்பு வாய்க்காலில் நீர் குறைக்கப்பட்டது. இதற்கு விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்ததால், நீர் வெளியேற்றத்தின் அளவு அதிகரிக்கப்பட்டது. கடைமடை பகுதியில், 40 சதவீதம் அளவுக்கு தான் உழவுப்பணியை மேற்கொண்டுள்ளனர். இவ்வாறு அவர் கூறினார்.

பவானிசாகர் அணையில் இருந்து தான் காலிங்கராயன், தடப்பள்ளி - அரக்கன்கோட்டை மட்டுமின்றி, எல்.பி.பி., வாய்க்கால் பாசனத்துக்கும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் வேகமாக கீழிறங்கி வருவதால் விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர்.

## கோமாரி தடுப்பூசி: விடுபட்டவர்களுக்கு மீண்டும் வாய்ப்பு

கோபி: கோபி கோட்டத்துக்கு உட்பட்ட பகுதிகளில், 2.40 லட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, கடந்த 1ம் தேதி முதல் கோமாரி நோய் தடுப்பூசி முகாம் துவங்கி, நேற்றுடன் முடிவடைந்தது. நேற்று மாலை வரை, 2,28,200 கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள மற்றும் விடுபட்ட கால்நடைகளுக்கு, கால்நடை வளர்ப்போர் அந்தந்த பகுதி கால்நடை மருந்தகங்களை அணுகி வரும், 30ம் தேதி வரை பயன்பெற, கோபி கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் மணி சேகரன் கேட்டுக்கொண்டுள்ளார்.

## காந்தி மார்க்கெட் கடைகளில் கேரிபேக் பயன்பாடு அதிகரிப்பு

திருச்சி: திருச்சியில், மாவட்ட மற்றும் மாநகராட்சி நிர்வாகம் பிளாஸ்டிக் கேரிபேக் பயன்படுத்த தடை விதித்துள்ள நிலையில், காந்தி மார்க்கெட் கடைகளில் கேரிபேக் பயன்படுத்துவது அதிகரித்து உள்ளது.

திருச்சி, காந்தி மார்க்கெட்டில் மளிகை பொருட்கள், காய்கறி, பழங்கள், பூக்கள் மட்டுமின்றி, பின்புறம் இறைச்சி கடைகள் என, ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடைகள் உள்ளன. மாநகராட்சி நகர் நல அலுவலர் தலைமையில், அவ்வப்போது கடைவீதியில் உள்ள கடைகளில் ரெய்டு நடத்தி தடை செய்யப்பட்ட பிளாஸ்டிக் கேரிபேக்குகளை பறிமுதல் செய்வதுடன், கடைக்காரர்களிடம் அபாராதம் வசூலிக்கின்றனர். ஆனால், ஹோட்டல், மளிகை கடைகள், டீ கடை ஆகிய இடங்களில் பிளாஸ்டிக் கேரிபேக் பயன்படுத்துவதை முற்றிலுமாக தடுக்க முடியவில்லை. பிளாஸ்டிக் கேரிபேக்குகளுக்கு மாற்றாக வந்துள்ள,

சணல் பை ஒன்று ஒரு ரூபாய்க்கு விற்பனை செய்வதால் வாடிக்கையாளர்கள் வாங்க மறுக்கின்றனர். கடைக்காரர்களும் தங்களின் பொருட்களை விற்பனை செய்தே ஆக வேண்டிய கட்டாயம் காரணமாக, கேரிபேக்குகளை மறைத்து வைத்து பொதுமக்களிடம் வழங்குகின்றனர். மாவட்ட நிர்வாகம், மாநகராட்சி அதிகாரிகள் இணைந்து ரெய்டு நடத்தினால் மட்டுமே, பிளாஸ்டிக் கேரிபேக் பயன்படுத்துவதை முற்றிலுமாக தடுக்க முடியும்.

## சின்ன வெங்காயம் விலை ஏறுமுகம்

ஒட்டன்சத்திரம் : ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் கடந்த வாரம் கிலோ ரூ.35க்கு விற்ற சின்ன வெங்காயம் இந்த வாரம் ரூ.45க்கு விற்பனையானது.

ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் நடப்பட்டிருந்த சின்ன வெங்காயம் அறுவடை செய்யப்பட்டு வந்தது. தற்போது பல பகுதிகளில் அறுவடை முடிந்து விட்டதால் மார்க்கெட்டில் வரத்து குறையத் தொடங்கி உள்ளது. இதன் காரணமாக விலை கடந்த வாரத்திலிருந்து அதிகரித்து வருகிறது. கடந்த வாரம் ஒரு கிலோ சின்ன வெங்காயம்

அதிகபட்சமாக ரூ.35க்கு விற்றது. ஆனால் இந்த வாரம் கிலோவிற்கு ரூ.10 அதிகரித்து ரூ.45 க்கு விற்றது. நல்ல தரமான காய்களுக்கு மட்டுமே இந்த விலை அதிகபட்ச விலை கிடைக்கிறது. மற்றவை கிலோவிற்கு ரூ.5 வரை குறைந்து விற்பனையானது. வெங்காயம் வரத்திற்கேற்ப விலையில் மாற்றம் ஏற்படும் என்று வியாபாரிகள் தெரிவித்தனர். ஆனால்

சில காய்கள் விலை ஏற்றமின்றி அதே விலைக்கு விற்றன. முருங்கை கிலோ ரூ.18 க்கும், சாம்பார் வெள்ளரி ரூ.2க்கும் விற்றது.

## தமிழக இளைஞர்களுக்கு "சூரிய மித்ரா' பயிற்சி

திண்டுக்கல் : இந்தியாவில் 2022 க்குள் "சோலார்' போன்ற புதுப்பிக்க வல்ல எரிசக்தி மூலம் ஒரு லட்சம் மெகாவாட் மின் உற்பத்தி செய்ய மத்திய அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. தனியாருடன் இணைந்து நாடு முழுவதும் "சோலார்' மின் உற்பத்தி மையங்கள் அமைக்கும் பணி நடக்கின்றன. இதன்மூலம் 20 லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என, தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக 2015-16 க்குள் பிளஸ் 2, ஐ.டி.ஐ.,- டிப்ளமோ முடித்த 50 ஆயிரம் இளைஞர்களுக்கு "சோலார்' உபகரணங்களை இணைத்தல், பழுதுநீக்குதல் பயிற்சி அளிக்கப்பட உள்ளது. தமிழகத்தில் இப்பயிற்சியை அளிக்க காந்திகிராம பல்கலையை தேசிய சோலார் நிறுவனம் தேர்வு செய்துள்ளது. முதற்கட்டமாக ரூ.12.84 லட்சம் தொகை ஒதுக்கியுள்ளது.

காந்திகிராம பல்கலை எரிசக்தி மையத்தலைவர் கிருபாகரன் கூறியதாவது: ஒவ்வொரு முறையும் 30 மாணவர்களுக்கு, மூன்று மாதங்கள் பயிற்சி அளிக்கப்படும். தங்குமிடம், உணவு இலவசம். பயிற்சி முடித்தவுடன் பசுமை வேலைவாய்ப்பு திறன் குழுமம் சான்றிதழ் வழங்கும். பெண்கள், கிராமப்புற, எஸ்.டி.,-எஸ்.டி., பிரிவினருக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பம் அடிப்படையில் பயிற்சி தேதி, இடம் அறிவிக்கப்படும். விரும்புவோர் *தீதீதீ.ஹுதஹுச்டுதணடிதி.ச்ஞி.டிண* என்ற இணையதளத்தில் விண்ணப்பிக்கலாம், என்றார்.

## தேனி வனக்கோட்டம் வன உயிரின சரணாலயமாக மாற்ற ஒப்புதல்!

உத்தமபாளையம் : தேனி வனக்கோட்டம் முழுவதும் வனஉயிரின சரணாலயமாக மாற்றும் முடிவிற்கு அரசிடம் ஒப்புதல் கிடைத்திருப்பதாக

தகவல்கள் வெளியாகியுள்ளது. அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் என்று வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

காடுகளின் பரப்பை அதிகரிக்கவும், சுற்றுப்புறச் சூழலில் கவனம் செலுத்தவும் மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இதற்காக ஏற்கனவே உள்ள வனப்பகுதிகளை வனஉயிரின சரணாலயங்களாக மாற்றி, பொதுமக்கள் நடமாட்டத்தை தவிர்க்கும் நடவடிக்கைகள் துவங்கியுள்ளன.அந்த அடிப்படையில் கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தேனி வனக்கோட்டத்தில் குமுளியில் இருந்து தேனி வரை ரோட்டிற்கு கிழக்கு பக்கம் உள்ள வனப்பகுதிகள் மேகமலை வனஉயிரின காப்பகம் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால் ரோட்டிற்கு மேற்கு பக்கம் உள்ள பகுதிகளை புதிதாக கம்பம் மேற்கு, உத்தமபாளையம், போடி வனச்சரகங்களாக மாற்றி செயல்படுத்தி வந்தனர். இந்த பகுதிகளுக்கென தனியாக அதிகாரிகள், பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இந்த வனப்பகுதிகள் ரிசர்வ் பாரஸ்ட் பகுதியாகவே இருந்தது. இதனால் இந்த வனப்பகுதிகளில் வனத்துறை அதிகாரிகளால் சரிவர செயல்படவில்லை.எனவே தேனி வனக்கோட்டம் முழுவதையும் வனஉயிரின சரணாலயமாக மாற்ற வனத்துறை பரிந்துரை செய்திருந்தது.

இந்த பரிந்துரையை மாநில வனஉயிரின பாதுகாப்பு தலைமை வார்டன் கவனமாக பரிசீலித்து, தற்போது ஒப்புதல் வழங்கியுள்ளார் என வனத்துறையினர் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வனத்துறையினர் கூறுகையில், "மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகள் முழுவதும் வன உயிரின சரணாலயமாக மாற்றப்படுவதன் மூலம் மத்திய வனம் மற்றும் சுற்றுப்புறச்சூழல் துறையின் கூடுதல் நிதி, வாகனங்கள், அதிகார வரம்புகள் அதிகரிக்கும். வனஉயிரினங்கள் பாதுகாக்கப்படும். வனப்பரப்புக்கள் அதிகரிக்கும். முக்கியமாக தேனி

வனக்கோட்டம் முழுவதும் ஒரே நிர்வாகத்தின் கீழ் செயல்படும். இதன்மூலம் கம்பம் மேற்கு, உத்தமபாளையம், போடி போன்ற ரெகுலர் வனச்சரகங்கள் மேகமலை வனஉயிரின சரணாலய அதிகாரத்தின் கீழ் வந்து விடும். இதற்கான அறிவிப்பு விரைவில் வெளியிடப்படும்' என்றனர்.

## விவசாய பயிற்சி

ராமநாதபுரம்: ராமநாதபுரத்தில் தமிழ்நாடு வேளாண் விற்பனை வாரியம் சார்பில் அறுவடை பின்செய் நேர்த்தி பயிற்சி நடந்தது. வேளாண் வணிக துணை இயக்குனர் ராஜகோபால் துவக்கி வைத்தார். வேளாண் தொழில்நுட்பங்கள் குறித்து வேளாண் விற்பனை வாரிய <உதவி இயக்குனர் அமலா பயிற்சி அளித்தார். வேளாண் வணிக அலுவலர் கீதா, ராமநாதபுரம் ஒழுங்கு முறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர்(பொறுப்பு) அமுதா ஆகியோர் பேசினர்.

## உணவு பாதுகாப்பு பயிற்சி முகாம்

ராமநாதபுரம்: ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் உணவு பாதுகாப்பு அலுவலர்களுக்கான பயிற்சி முகாம் நடந்தது. உணவு பாதுகாப்பு மற்றும் உரிமம் குறித்து இணையதளம் மூலம் லேப்-டாப்பில் பதிவு செய்வதற்கான வழிமுறைகள் குறித்து நியமன அலுவலர் ஜெகதீஷ் சந்திரபோஸ், திட்ட அலுவலர் சேக்ஜாவித் பயிற்சி அளித்தனர். ராமநாதபுரம், சிவகங்கை மாவட்டத்தைச் சேர்ந்த உணவு பாதுகாப்பு அலுவலர்கள் 26 பேர் பயிற்சி பெற்றனர். உணவு பொருட்கள் உற்பத்தி மற்றும் விற்பனை செய்வோர் தங்களது நிறுவனத்துக் கான உரிமம் மற்றும் பதிவை தீதீதீ.ஞாணிணிஞீடுடிஞிஞுணண்டிணஞ்.ஞூச்ண்ச்டி.ஞ்ணிதி.டிண என்ற இணையதள முகவரியில் பதிவு செய்யலாம் என கலெக்டர் தெரிவித்தார்.

**விவசாயிகளுக்குமானியம்**

திருவாடானை: திருவாடானை வேளாண்மை உதவி இயக்குநர் நாகராஜ் கூறியதாவது: அரசு வழிகாட்டுதல்படி நெல் நேரடி வரிசை விதைப்பு செய்யும் விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் ஹெக்டேருக்கு ரூ.5 ஆயிரம் வீதமும், தேசிய நீடித்த நிலையான வேளாண் இயக்க திட்டத்தின் கீழ் 50 சத மானிய விலையிலும் இடு பொருட்கள் திருவாடானை வேளாண்மை விரிவாக்க மையம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது, என்றார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**மேட்டூர் அணைக்கு நீர்வரத்து உயர்வு**

கர்நாடக அணைகளிலிருந்து திறக்கப்பட்ட நீரால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 1,114 கனஅடியிலிருந்து 6,197கனஅடியாக அதிகரித்தது.

மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.16 அடியாகவும், நீர் இருப்பு 31.14 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 13 ஆயிரம் கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 800 கனஅடி நீரும் திறக்கப்பட்டது.

**தமிழகம், புதுச்சேரியில் இடியுடன் கூடிய மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்யும் வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது: வெப்பசலனம் காரணமாக, தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பதிவாகி வருகிறது. குறிப்பாக, ஓரிரு மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பதிவாகியது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பதிவாகியது.

திருவள்ளூர் மாவட்டம் திருத்தணியில் அதிகபட்சமாக 130 மி.மீட்டர் மழை பதிவாகியது. அதற்கு அடுத்தப்படியாக, அரக்கோணத்தில் 90 மி.மீ, அதிராம்பட்டிணத்தில் 60 மி.மீ, உளூந்தூர்பேட்டை, சென்னை டி.ஜி.பி. அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு, திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, கடலூர் மாவட்டம் கே.எம்.கோயில் ஆகிய இடங்களில் 50 மி.மீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழைக்கு வாய்ப்பு:

வட கடலோர தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக, வியாழக்கிழமை (செப்.24), வெள்ளிக்கிழமை (செப்.25) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமையன்று ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**சூரிய மின் உற்பத்தியில் வெளிநாட்டு தொழில்நுட்பங்கள்**

சூரிய மின் சக்தியில் வெளிநாட்டுத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுவதாக மின்சாரத் துறை அமைச்சர் நத்தம் ஆர்.விஸ்வநாதன் தெரிவித்தார்.

சட்டப் பேரவையில் திங்கள்கிழமை கேள்வி நேரத்தின் போது, மரபு சாரா எரிசக்தி ஆராய்ச்சி மையங்கள் அமைக்கப்படுமா என்ற கேள்வியை ஆர்.சரத்குமார் எழுப்பினார். இதைத் தொடர்ந்து, எழுப்பப்பட்ட துணைக் கேள்விகளுக்கும் அமைச்சர் விஸ்வநாதன் அளித்த பதில்:

சூரிய மின்சக்தி போன்ற மரபு சாரா எரிசக்திக்கென தனியாக ஆராய்ச்சி மையங்களை அமைக்கும் திட்டம் ஏதுமில்லை. மரபு சாரா எரிசக்தித் துறையில் பல்வேறு ஆராய்ச்சிகளை சீனா, கொரியா, ஸ்பெயின், ஸ்வீடன், ஜெர்மனி ஆகிய நாடுகள் மேற்கொண்டு வருகின்றன. இந்த நாடுகள் அதிக அளவில் தரமான சூரிய மின் தகடுகளை உற்பத்தி செய்து கொடுக்கின்றன.

அந்த நாடுகளில் மேற்கொள்ளப்படும் ஆய்வுகளையும், தொழில்நுட்பங்களையும் தமிழகத்தில் பயன்படுத்திக் கொள்கிறோம். எனவே, தனியாக ஆர்யாச்சி மையம் அமைக்க வேண்டியதில்லை.

தமிழகம் இப்போது காற்றாலை மின் உற்பத்தியில் முதலிடம் வகிக்கிறது. சூரிய மின் சக்தி உற்பத்தியிலும் இந்த ஆண்டு இறுதிக்குள் முதலிடத்தைப் பிடிக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்றார் அமைச்சர் நத்தம் விஸ்வநாதன்.

**போதிய மழையில்லாததால் வறண்டு வரும் செம்பரம்பாக்கம் ஏரி**



போதிய மழை பெய்யாததால் சென்னையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் செம்பரம்பாக்கம் ஏரி வரலாறு காணாத வகையில் கடும் வறட்சியை சந்தித்து வருகிறது.

சென்னையின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்யும் ஏரிகளுள் செம்பரம்பாக்கம் ஏரியும் ஒன்று. இந்த ஏரி 24 அடி உயரமும், 3,645 மில்லியன் கன அடி கொள்ளளவும் கொண்டது. இந்த வருடம் போதிய மழை இல்லாததால், செம்பரம்பாக்கம் ஏரியின் நீர் இருப்பு நாளுக்கு நாள் குறைந்து வருகிறது.

தற்போது இந்த ஏரியின் நீர் இருப்பு திங்கள்கிழமை காலை நிலவரப்படி 4.56 அடியும், கொள்ளளவு 188 மில்லியன் கன அடி நீர் மட்டுமே உள்ளது.

ஏரியின் பெரும்பாலான பகுதி வறண்ட நிலமாக காட்சியளிக்கிறது. கடந்த வருடம் செப்டம்பர் 21 தேதி நிலவரப்படி, ஏரியின் நீர் இருப்பு 8.68 அடியாகவும், கொள்ளளவு 586 மில்லியன் கன அடியாகவும் பதிவாகியுள்ளது.

கடந்த வருடம் நீர் இருப்புடன் ஒப்பிடும்போது, இந்த வருடம் ஏரியின்

நீர் இருப்பு பாதி அளவு குறைந்துள்ளது. தற்போது ஏரியில் இருந்து சென்னைக் குடிநீர்த் தேவைக்காக நாள்தோறும் 31 கன அடிநீரும், சிப்காட் குடிநீர் தேவைக்காக 7 கன அடி நீரும், நீர் ஆவியாதல், பூமி உறிஞ்சும் தன்மை மூலம் 10 கன அடி நீரும் தினமும் செலவாகி வருகிறது. எனவே வருகின்ற காலங்களில் மழை பெய்யாவிட்டால் மிகக் கடுமையான வறட்சியை சந்திக்கக் கூடும். இதனால் சென்னைக் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதில் தட்டுப்பாடு ஏற்படும் என்ற அச்சம் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து பொதுப் பணித் துறை அதிகாரி ஒருவர் கூறியதாவது: செம்பரம்பாக்கம் ஏரி கடுமையான வறட்சியை இந்த ஆண்டு சந்தித்துள்ளது.

கடந்த 2006-ஆம் வருடத்துக்குப் பின் பதிவான நீர் இருப்பு விவரத்தில் இந்த ஆண்டு அதிப்படியான வறட்சி ஏற்பட்டு, இதுவரை இல்லாத அளவில் தற்போது ஏரியில் மிகவும் குறைந்த அளவு நீர் மட்டுமே உள்ளது என்றார்.

**மேட்டூர் அணையில் 3 வாரங்களுக்கு மட்டுமே போதுமான தண்ணீர்: விவசாயிகள் கவலை**

மேட்டூர் அணையின் நீர் இருப்பு சரிந்ததால், மூன்று வாரங்களுக்கு பிறகு பாசனத்துக்குத் தண்ணீர் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாகி உள்ளது.

காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பின்படி கர்நாடகம் தமிழகத்துக்கு மாதந்தோறும் வழங்கவேண்டிய தண்ணீரைத் தராததாலும், காவிரியின் நீர்ப் பிடிப்புப் பகுதிகளில் மழை இல்லாத காரணத்தாலும் மேட்டூர் அணைக்கு வரும் நீரின் அளவு திங்கள்கிழமை காலை நொடிக்கு 1,114 கன அடியாகச் சரிந்தது. ஆனால், பாசனத்துக்காக நொடிக்கு 13,800 கன அடி வீதம் தண்ணீர் திறக்கப்படுகிறது. இதனால், மேட்டூர் அணையின்

நீர் இருப்பு நாள் ஒன்றுக்கு ஒரு டி.எம்.சி வீதம் குறைந்து வருகிறது. திங்கள்கிழமை காலை மேட்டூர் அணையில் நீர் இருப்பு 31.87 டி.எம்.சியாக இருந்தது. மேட்டூர் நீர்த் தேக்கத்தில் உள்ள மீன்களைப் பாதுகாக்கவும், குடிநீர்த் தேவைக்கும் சுமார் 10 டி.எம்.சி தண்ணீர் இருப்பு வைத்துக்கொள்ள வேண்டும். மீதம் உள்ள 21 டி.எம்.சி தண்ணீர் மூன்று வாரங்களுக்கு மட்டுமே பாசனத்துக்குப் போதுமானதாக உள்ளது. இதனால், கர்நாடகம் தமிழகத்துக்கு வழங்கவேண்டிய தண்ணீரைப் பெறுவதற்கு தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இதற்கு மத்திய அரசு கைகொடுக்க வேண்டும். இல்லையெனில், பலத்த மழை பெய்து மேட்டூர் அணைக்கு தண்ணீர் வந்தால் மட்டுமே காவிரி டெல்டா பாசனப் பகுதிகளில் பயிர்களைப் பாதுகாக்க முடியும். இல்லாவிட்டால், பயிர்கள் கருகும் அபாயம் ஏற்படும்.

நந்தி சிலை: திங்கள்கிழமை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 68.91 அடியாகச் சரிந்ததால் பண்ணவாடி பரிசல்துறையில் நந்தி சிலையின் முகம் நீருக்கு வெளியே தெரிகிறது. கடந்த 14-ஆம் தேதி மேட்டூர் அணையின் நீர் மட்டம் 80 அடிக்குக் கீழே சரிந்தபோது, பண்ணவாடி பரிசல்துறைப் பகுதியில் கிறிஸ்துவ ஆலயத்தின் ஒரு கோபுரம் வெளியே தெரிந்தது. அணையின் நீர் மட்டம் 60 அடிக்குக் கீழே குறைந்தால், கீரைக்காரனூர் பகுதியில் உள்ள சோழப்பாடி வீரபத்திரன் ஆலயமும், 50 அடிக்குக் கீழே சரிந்தால், திப்பு சுல்தான் கோட்டையும், 40 அடிக்குக் கீழே குறைந்தால் மீனாட்சி அம்மன் ஆலயமும் தெரியத் தொடங்கும்.

**தமிழகம், புதுச்சேரியில் மழைக்கு வாய்ப்பு**

தமிழகம், புதுச்சேரியில் அடுத்த 24 மணி நேரத்தில் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரி கூறியதாவது:

வெப்பச் சலனம் காரணமாக தமிழகம், புதுச்சேரியில் பரவலாக மழை பதிவாகி வருகிறது. குறிப்பாக, ஓரிரு மாவட்டங்களில் இடியுடன் கூடிய பலத்த மழை பதிவானது. கடந்த 24 மணி நேரத்தில் தமிழகம், புதுச்சேரியில் ஒரு சில இடங்களில் மழை பதிவானது. திருவள்ளூர் மாவட்டம், திருத்தணியில் அதிகபட்சமாக 130 மி.மீட்டர் மழை பதிவானது. அதற்கு அடுத்தபடியாக, அரக்கோணத்தில் 90 மி.மீ, அதிராம்பட்டினத்தில் 60 மி.மீ, உளுந்தூர்பேட்டை, சென்னை டி.ஜி.பி. அலுவலகம், திருவள்ளூர் மாவட்டம் பள்ளிப்பட்டு, திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி, கடலூர் மாவட்டம் கே.எம்.கோயில் ஆகிய இடங்களில் 50 மி.மீட்டர் மழை பதிவாகியது.

பலத்த மழைக்கு வாய்ப்பு: வட கடலோர தமிழகத்தில் தென்மேற்குப் பருவமழை தீவிரம் அடைந்துள்ளது. இதன் காரணமாக, வியாழக்கிழமையும் (செப்.24), வெள்ளிக்கிழமையும் (செப்.25) பலத்த மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் செவ்வாய்க்கிழமையன்று ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில், நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரியாக இருக்கும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

## "தமிழகத்துக்கு இன்னும் 3.5 டிஎம்சி தண்ணீர் மட்டுமே வழங்க வேண்டியுள்ளது'

காவிரி நதிநீர் பங்கீடு விவகாரத்தில், இடர்பாட்டு நீர் பகிர்வுத் திட்டத்தின்படி நிகழாண்டில் இன்னும் 3.5 டிஎம்சி தண்ணீர் மட்டுமே

தமிழகத்துக்கு கர்நாடக வழங்க வேண்டியுள்ளது என்று கர்நாடக நீர்வளத் துறை அமைச்சர் எம்.பி.பாட்டீல் தெரிவித்தார்.

இதுகுறித்து பெங்களூரில் திங்கள்கிழமை செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

கர்நாடகத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. தென்மேற்குப் பருவமழை பொய்த்துவிட்டதால், காவிரியின் குறுக்கே உள்ள அணைகளில் நீர் இருப்பு போதுமானதாக இல்லை. கர்நாடக விவசாயிகள் பாசனத்துக்கு தண்ணீர் இல்லாமல் தவித்து வருகிறார்கள். மேலும், குடிநீர் இல்லாமல் மக்கள்

தவிக்கின்றனர்.

இந்த நிலையில், தமிழகத்துக்கு காவிரியில் தண்ணீர் விடும் வாய்ப்பு இல்லை. வழக்கமான மழை பருவத்தின்போது, காவிரி நதியில் இருந்து தமிழகத்துக்கு 192 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும். ஆனால், நிகழாண்டில் மழை இல்லாததால், இடர்பாட்டு கால நீர் பகிர்வுத் திட்டத்தின்படி, தமிழகத்துக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. சாதாரண மழை பருவத்தில், செப்டம்பர் வரை தமிழகத்துக்கு 97 டிஎம்சி தந்திருக்க வேண்டும். இதுவரை 66 டிஎம்சி தண்ணீர் தரப்பட்டுள்ளது.

காவிரி நடுவர் மன்ற இறுதித் தீர்ப்பில், இடர்பாட்டு கால நீர் பகிர்வு அளவு குறித்து எதுவும் தெரிவிக்கவில்லை. எனினும், 2006-ஆம் ஆண்டில் காவிரி மேலாண்மைக் குழுவில் உருவாக்கப்பட்ட இடர்பாட்டு கால நீர் பகிர்வுத் திட்டத்தின்படி, தமிழகத்துக்கு 69.5 டிஎம்சி தண்ணீர் வழங்க வேண்டும்.

அதன்படி, இன்னும் 3.5 டிஎம்சி தண்ணீர் மட்டுமே தமிழகத்துக்கு தர வேண்டியுள்ளது. அந்த தண்ணீரைத் தருவதற்கு கூடுமானவரை முயற்சி மேற்கொள்ளப்படும். இடர்பாட்டு நீர் பகிர்வுத் திட்டத்தை ஏற்க தமிழகம் முன்வர வேண்டும். 2012-13-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றம் அளித்த

தீர்ப்பின்படி, இடர்பாட்டு காலத்தை இரு மாநிலங்களும் பகிர்ந்து கொள்ள வேண்டும்.

வரும் 28-ஆம் தேதி பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காவிரி மேலாண்மைக் குழுக் கூட்டம் நடைபெறவிருக்கிறது. இந்தக் கூட்டத்தில், காவிரி நதியின் குறுக்கே கட்டப்பட்டுள்ள அணைகளின் நீர் இருப்பு விவரத்தை தாக்கல் செய்வோம். இடர்பாட்டு கால நீர் பகிர்வுத் திட்டத்தை தமிழகம் ஏற்கத் தவறினால், கர்நாடக அரசு உச்ச நீதிமன்றத்தை அணுகி முறையிடும் என்றார்.

## 25-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறைதீர் நாள் கூட்டம் மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ளது.

இதுகுறித்து அவர் வெளியிட்டுட்ட செய்திக் குறிப்பு: திருவள்ளூர் மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற செப்டம்பர் 25-ஆம் தேதி (வெள்ளிக்கிழமை) முற்பகல் 11 மணியளவில் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், மாவட்ட ஆட்சியர் கொ.வீரராகவ ராவ் தலைமையில் நடைபெற உள்ளது.

கூட்டத்தில் இந்த மாவட்டத்தில் உள்ள வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வருவாய்த் துறை, மின்வாரியம், கூட்டுறவுத் துறை, பொதுப்பணித் துறை, வேளாண்மை பொறியியல் துறை, மீன்வளத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, வேளாண் விற்பனை, வணிகத் துறை, இதர வேளாண் சார்ந்த துறை

அலுவலர்கள் பங்கேற்று விவசாயிகளின் குறைகளுக்கு தீர்வு காணவுள்ளனர். எனவே இந்த மாவட்டத்தைச் சார்ந்த விவசாயிகள் மேற்படி கூட்டத்தில் கலந்து கொண்டு பயன் பெற வேண்டும். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பவானியில் மரக்கன்று நடும் பணி தொடக்கம்

பவானி நகராட்சி நிர்வாகம், தமிழக வனத்துறை, சித்தோடு அம்மன் கலை அறிவியல் கல்லூரி இணைந்து, 1000 இடங்களில் மரக்கன்றுகள் நடும் பணி திங்கள்கிழமை தொடங்கப்பட்டது.

பழைய பேருந்து நிலைய வளாகத்தில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, பவானி நகர்மன்றத் தலைவர் கே.சி.கருப்பணன் தலைமை வகித்தார். ஈரோடு மாவட்ட வன அலுவலர் நாகராஜன், அம்மன் கல்லூரித் தாளாளர் ஜெயலட்சுமி, ஈரோடு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவர் என்.கிருஷ்ணராஜ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மகிழம், தேக்கு, வேம்பு உள்பட பல்வேறு வகையான மரக்கன்றுகள் நகரில் பல்வேறு இடங்களில் நடப்பட்டு இரும்புக் கம்பி கூண்டுகள் வைக்கப்பட்டன. நடப்பட்ட மரங்கள் சுடர் அம்மன் அமைப்பின் மேற்பார்வையில் வளர்க்கப்படும்.

இதில், பவானி நகர்மன்ற துணைத் தலைவர் ஏ.ராஜேந்திரன், வனத்துரை அலுவலர்கள் முருகேசன், விஜயகுமார், அதிமுக மாணவரணி மாவட்ட துணைச் செயலர் சீனிவாசன், கல்லூரி முதல்வர் எம்.சதீஷ்குமார், ஒருங்கிணைப்பாளர் கண்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## கே.ஆர்.பி.அணை நீரை ஏரிகளுக்கு கொண்டு வர வலியுறுத்தல்

கே.ஆர்.பி.அணை நீரை தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் பகுதியில் உள்ள உச்சம்பட்டி, கரகப்பட்டி உள்ளிட்ட ஏரிகளுக்கு பாசனத்துக்கு கொண்டு வர வலியுறுத்தி, அப்பகுதி விவசாயிகள், பொதுமக்கள் திங்கள்கிழமை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தனிடம் மனு அளித்தனர்.

அவர்கள் அளித்த மனுவின் விவரம்: கிருஷ்ணகிரி மாவட்டம், கே.ஆர்.பி.அணையிலிருந்து வெளியேறும் உபரிநீர், தருமபுரி மாவட்டம், காரிமங்கலம் பகுதியில், பாசனத்துக்கு பயன்படுத்தும் வகையில், கடந்த 2003-ஆம் ஆண்டு ரூ.7 கோடியே 18 லட்சத்தில் கிளைக் கால்வாய் திட்டம் செயல்படுத்தப்பட்டது. இந்தத் திட்டத்தில், சில கிராமங்களுக்கு முழுமையாக தண்ணீர் வருவதில்லை.

குறிப்பாக, கிருஷ்ணகிரி அணையிலிருந்து திறந்துவிடும் உபரிநீர், மணிக்கட்டியூர் ஏரிக்கு வருகிறது. அங்கிருந்து பெரியேரிக்கு தண்ணீர் செல்ல இரண்டு மதகுகளும், திண்டல் ஏரிக்கும் தண்ணீர் செல்ல ஒரு மதகும் உள்ளது. இதில், மதகுகளைச் சரிவர திறக்காததால், பல நூறு ஏக்கர் பரப்பளவு கொண்ட, உச்சம்பட்டி ஏரி, பெரியமிட்டஹள்ளி ஏரி, தெல்லம்பட்டி ஏரி, கரகப்பட்டி ஏரி உள்ளிட்ட ஏரிகளுக்கு இதுநாள்வரை தண்ணீர் வரவில்லை. இதனால், இக்கிராமங்களில் உள்ள ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதியின்றி உள்ளதால் விவசாயிகள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

எனவே, விவசாயிகளின் நலன் கருதி, மாவட்ட நிர்வாகம் இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து கிளைக் கால்வாய் திட்டத்தில் அனைத்து ஏரிகளுக்கும் தண்ணீர் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## இயந்திர நெல் நடவு செய்ய மானியம்: வேளாண்மை உதவி இயக்குநர் தகவல்

இயந்திர நெல் நடவு செய்ய மானியம் வழங்கப்படுகிறது என கிருஷ்ணகிரி வேளாண்மை உதவி இயக்குநர் ராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி வட்டாரத்தில் 2015 - 16-ஆம் ஆண்டில் தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் இயந்திர நடவு மூலம் நெல் சாகுபடி செய்ய ஆர்வமுள்ள விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இந்தத் திட்டத்தில் ஹெக்டேருக்கு

ரூ. 3 ஆயிரம் பின் ஏற்பு மானியமாக வழங்கப்படும். வரும் நவரை பருவத்தில் நெல் சாகுபடியில் நடவுக்கான ஆள் பற்றாக்குறை, நடவு கூலி சுமையைக் குறைக்கும் நோக்குடன் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு இந்த மானியம் வழங்கப்படுகிறது. இந்த மானியத் தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கில் நேரடியாக

செலுத்தப்படும்.

இந்தத் திட்டத்தின் கீழ் பயன்பெற விரும்பும் விவசாயிகள், இயந்திர நடவு செய்தமைக்கான ரசீது, தங்கள் வயலில் இயந்திர நடவு செய்யும் போது, விவசாயி, நடவு இயந்திரம் மற்றும் தேதியுடன் எடுக்கப்பட்ட புகைப்படம், வங்கிக் கணக்கு புத்தகத்தின் நகல், ஆதார் அட்டை, குடும்ப அட்டை அல்லது வாக்காளர் அடையாள அட்டை ஆகிய ஆவணங்களுடன் விண்ணப்பிக்க வேண்டும்.

மேலும், விவரங்களுக்கு தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்கள் சுப்பிரமணி (கிருஷ்ணகிரி) - 8695866699, அண்ணாமலை (மாதேப்பட்டி) - 9976413435, மாதவன் (ஆலப்பட்டி) - 8124716171, தனபால் (சோக்காடி) - 9095660258 ஆகியோரை தொடர்பு கொண்ட பயன்பெறலாம்.

### செப். 25-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருச்சி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், மாவட்ட ஆட்சியரகத்தில் செப். 25-ம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறும் என ஆட்சியர் கே.எஸ். பழனிசாமி தெரிவித்துள்ளார்.

முன்னோடி விவசாயிகள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் இக்கூட்டத்தில் பங்கேற்று, தங்கள் கருத்துகள் மற்றும் ஆலோசனைகளைத் தெரிவிக்குமாறு ஆட்சியர் தனது செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

### பட்டுப்புழு வளர்ப்பில் ஆண்டுக்கு ரூ.1.80 லட்சம் வரை வருவாய்

பட்டுப்புழு வளர்ப்பில் ஆண்டுக்கு ரூ. 1.80 லட்சம் வரை வருவாய் பெறலாம் என்றார் மாவட்ட ஆட்சியர் ச. ஜெயந்தி.

கரூர் மாவட்டம், மண்மங்கலம் வட்டம், சேமங்கி கிராமத்தில் பட்டு வளர்ச்சித் துறை சார்பில் ஆலோசனைப் பெற்று பட்டுப்புழு வளர்ப்பு மையம் அமைத்து பயன்பெறும் விவசாயிகள் மல்பரி கன்றுகள் வளர்த்து வருவதை திங்கள்கிழமை ஆய்வு செய்த அவர் மேலும் கூறியது:

கரூர் மாவட்டத்தில் தற்போது 201 ஏக்கரில் 113 விவசாயிகள் மல்பரி பயிரிட்டு வளர்த்து வருகிறார்கள். இத்திட்டத்திற்காக ஒரு ஏக்கர் நடவு செய்ய தமிழக அரசு ரூ. 10,500 மானியம் வழங்குகிறது. மேலும் பட்டு

வளர்ப்புக்கு கூடம் அமைக்க ரூ. 63,000-ம் வழங்குகிறது. அதுமட்டுமன்றி சொட்டு நீர் பாசன முறையில் பயன்பெற 5 ஏக்கர் வரையுள்ள விவசாயிகளுக்கு ரூ.30,000-ம்,5 ஏக்கருக்கு மேலுள்ள விவசாயிகளுக்கு ரூ.22,500-ம் மானியமாக வழங்கப்படுகிறது.

மேலும் தளவாட சாமான்கள் (தட்டு,நெற்றிக்கா,கத்திரி,தண்டு அறுவடை இயந்திரம்,ஸ்பிரேயர்,தட்ப வெப்பநிலை காட்டு கருவி,குளிரூட்டும்

கருவி,மின்விசிறி) வாங்கிட ரூ.52,000 மானியம் வழங்கப்படுகிறது. இவற்றைத் தவிர பட்டுவளர்ப்பு இன்சூரன்ஸ்,மகளிர் பட்டு விவசாயி மற்றும் பெண் தொழிலாளிகளுக்கு மருத்துவக் காப்பீடு திட்டமும் வழங்கப்படுகிறது. ஒரு ஏக்கருக்கு 600 கிலோ பட்டுக் கூடுகள் உற்பத்தியாகின்றன.

ஒரு கிலோ வெண்பட்டு ரூ.300 வரை சந்தையில் விற்பனையாகிறது. இதன் மூலம் ஆண்டுக்கு ரூ.1.80 லட்சம் வரை வருவாய் ஈட்டப்படுகிறது. இத்திட்டத்திற்கு செலவாகும் தொகையை பார்க்கும்போது ரூ.50,000 வரை மட்டுமே விவசாய பணிக்காக செலவாகிறது. இதனால் ஆண்டுக்கு நிரந்தர வருமானமாக இத்தொழில் திகழ்கிறது என்றார்.

பட்டு வளர்ச்சித்துறை உதவி இயக்குநர் வடிவேல், துணை அலுவலர் கலைச்செல்வி மற்றும் முன்னோடி விவசாயிகள் உடனிருந்தனர்.

### மானிய விலையில் வேளாண் பொருள்கள் விநியோகம்

பொன்னமராவதி வட்டாரத்தில் வேளாண்மைத்துறை மூலம் வேளாண் இடுபொருள்கள் மற்றும் வேளாண் கருவிகள் மானிய விலையில் விநியோகம் செய்யப்படுவதாக வேளாண்மை உதவி இயக்குநர் சி. ஜெயபாலன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நடப்பு நிதியாண்டில் விவசாயிகளின் முன்னேற்றத்துக்காக வேளாண்துறை மூலம் பல்வேறு திட்ட ப்பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சம்பா பருவத்தில் நெல் நடவை இயந்திரம் மூலம் நடவு செய்யும் விவசாயிகளுக்கு ஹெக்டருக்கு ரூ. 3000 மானியம் வழங்கப்பட உள்ளது. திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் கோனாவீடர் பயன்படுத்தி களை எடுப்பதிற்காக 50 சதவீத மானிய விலையில் கோனாவீடர் களைக் கருவிகள் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.சம்பா நடவு செய்வதற்கு

முன்னர் பசுந்தாள் உரப்பயிர்களான சணப்பு, தக்கைப்பூண்டு, விதைப்பு செய்து அதனை மடக்கி உழவு செய்யும் விவசாயிகளுக்கு விதை கிரயத்தில் 50 சதவீத மானியம் வழங்கப்படுகிறது.

நிலக்கடலை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் பொக்கில்லாத திரட்சியான நிலக்கடை உற்பத்தி செய்வதற்கு தேவையான ஜிப்சம் 50 சதவீத மானிய விலையில் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. நெல், உளுந்து மற்றும் நிலக்கடலை பயிர்களை தாக்கும் பூச்சி, நோய்களை கட்டுப்படுத்தத் தேவையான பூச்சி மருந்துகளை பயிர்களுக்கு தெளிக்க உதவும் விசைத்தெளிப்பான்கள் 50 சதவீத மானிய விலையில் தேசிய உணவு பாதுகாப்பு திட்டம் வழங்கப்பட்டு வருகிறது.

தென்னை சாகுபடி செய்துள்ள விவசாயிகள் சொட்டுநீர்ப் பாசனம் அமைக்கவும், சிவப்பு கூண் வண்டு தாக்குதலை கட்டுப்படுத்தவும் மானிய விலையில் பாசன கருவிகள் மற்றும் இனக்கவர்ச்சிப் பொறிகள் வழங்கப்பட்டு வருகிறது.

**வேதாரண்யத்தில் நாளை விவசாயிகள் சங்க மாநாடு**

வேதாரண்யத்தில் நாகை, திருவாரூர் மாவட்ட குடிக்காணி மற்றும் குத்தகை சாகுபடிதாரர்கள் விவசாயப் பாதுகாப்பு சாங்கத்தின் கோரிக்கை மாநாடு புதன்கிழமை (செப். 23) நடைபெறுகிறது.

ராஜாஜி பூங்காவில் மாலை 5 மணிக்கு தொடங்கும் இந்த மாநாட்டில் தமிழ்நாடு கோயில் மனை குடியிருப்போர் சங்கத்தின் மாநிலத் தலைவர் அ. பாலசுப்பிரமணியன், செயலாளர் வை. சிவபுண்ணியம், பொருளாளர் ஏழுமலை உள்ளிட்டோர் பங்கேற்று பேசுகின்றனர். முன்னதாக பேரணி நடைபெறுகிறது.

## செப். 25-ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் செப். 25 ஆம் தேதி நடைபெற உள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்ட அரங்கில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வரும் 25-ம் தேதி காலை 10 மணிக்கு நடைபெற

உள்ளது. கூட்டத்தில், நீர்ப்பாசனம், கடனுதவிகள், வேளாண் இடுபொருள்கள், வேளாண்மை இயந்திரங்கள் மற்றும் விவசாயிகள் மேம்பாட்டுக்கான நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்படும். விவசாயிகள் மற்றும் விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் கூட்டத்தில் பங்கேற்று குறைகளை தெரிவித்து பயன்பெறலாம்.

## குமரி மாவட்டத்தில் தேங்காய் விலை தொடர் சரிவு

குமரி மாவட்டத்தில் தேங்காய் விலை தொடர்ந்து சரிவடைந்து வருவதால் தென்னை விவசாயிகள் மற்றும் தேங்காயை இருப்பு வைத்த வணிகர்கள் கடும் பாதிப்பிற்குள்ளாகியுள்ளனர்.

குமரி மாவட்டத்தில் முக்கிய வேளாண் விளை பொருளாக தேங்காய் உள்ளது. தற்போது தேங்காய்க்கு நல்வெட்டு பருவமாக உள்ளதால் வரத்து அதிகமாக உள்ளது. இதனால் தேங்காய் விலை தொடர்ந்து சரிந்து சில்லறை விற்பனை விலை கிலோவிற்கு ரூ. 20 ஆக குறைந்துள்ளது.

இதுகுறித்து தென்னை விவசாயி ஒருவர் கூறுகையில்: தென்னையில் தற்போது நல் வெட்டு சீசனாகும், இதனால் உற்பத்தி அதிகமாக உள்ளது. அதே வேளையில் தேங்காய், தேங்காயிலிருந்து தயாரிக்கப்படும்

தேங்காய் எண்ணெய் உள்ளிட்டவைகளின் ஏற்றுமதி வணிகம் சரிவடைந்து வருகின்றது.

கடந்த இரு மாதங்களுக்கு முன்பு கிலோ ரூ. 35 வரை விற்பனையான தேங்காய் விலை தொடர் சரிவைச் சந்தித்து தற்போது ரூ. 20 ஐ எட்டியுள்ளது. தேங்காயின் விலை வீழ்ச்சி தென்னை விவசாயிகளை கடுமையாக பாதிக்கச் செய்துள்ளது என்றார் அவர்.

இம்மாவட்டத்தில் தேங்காய் வணிகர்கள் பலர் தேங்காயை வாங்கி இருப்பு வைத்து விற்பனை செய்வது, கொப்பரைக்கு கொடுப்பது வழக்கம். இந்நிலையில் விலை வீழ்ச்சி காரணமாக, தேங்காயை இருப்பு வைத்த வணிகர்கள் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர்.

## வேளாண்மைப் பொறியியல் துறையில் 2 காவலர் பணிக்கு விண்ணப்பிக்கலாம்

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாகவுள்ள 2 காவலர் பணியிடத்துக்கு தகுதியானோர் விண்ணப்பிக்குமாறு ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக, அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கன்னியாகுமரி மாவட்டத்தில், வேளாண்மைப் பொறியியல் துறையில் காலியாகவுள்ள இரண்டு காவலர் பணியிடங்களை பூர்த்தி செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. இந்த பணியிடங்களுக்கு மாவட்டத்தைச் சேர்ந்த தகுதியான நபர்களிடமிருந்து வரும் 30 ஆம் தேதி மாலை 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

இந்த பணியிடத்துக்கு விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். 1.7.2015 அன்று குறைந்தபட்ச வயது 18 ஆகவும், அதிகபட்ச வயது பொதுப் பிரிவினருக்கு 30, எம்பிசி, பிசி,

முஸ்லிம் பிரிவினருக்கு 32, எஸ்சி, எஸ்டி பிரிவினருக்கு 35 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதுப்போட்டி முன்னுரிமை பெற்றவருக்கு ஒரு இடமும், தாழ்த்தப்பட்ட, அருந்ததியர், ஆதரவற்ற விதவை மற்றும் இதர முன்னுரிமையுள்ளவர்களுக்கு ஒரு இடமும் என ஒதுக்கப்பட்டுள்ளது. தகுதியான நபர்கள் மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை அலுவலகத்தில் நேரில் விண்ணப்பங்களை பெற்று பூர்த்தி செய்து விண்ணப்பிக்கலாம். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: செயற்பொறியாளர், வேளாண்மைப் பொறியியல் துறை, 280, லூயிஸ் தெரு, குடிநீர்த்தொட்டி அருகில், நாகர்கோவில்.

### 30இல் மீன் உணவு தயாரித்தல் இலவசப் பயிற்சி

தூத்துக்குடி தருவைக்குளத்தில் செப். 30ஆம் தேதி நடைபெற உள்ள மீன் உணவு தயாரித்தல் பயிற்சியில் சேர விண்ணப்பிக்கலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து, தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட செய்திக்குறிப்பு:

தூத்துக்குடி மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின்கீழ் தருவைக்குளத்தில் செயல்படும் கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் துறையில் பண்ணை சார்ந்த மீன் உணவு தயாரித்தல் குறித்த ஒரு நாள் இலவசப் பயிற்சி முகாம் செப். 30ஆம் தேதி நடைபெறுகிறது.

இந்தப் பயிற்சியில் மீனுக்குத் தேவையான ஊட்டச்சத்துக்கள், மீன் உணவு தயாரிக்க தேவையான தாவர மற்றும் விலங்கின மூலப்பொருள்கள் தேர்ந்தெடுத்தல், தேர்ந்தெடுத்த மூலப்பொருள்களை நன்றாக அரைத்தல், மீன் உணவு பிழிந்தெடுக்க பயன்படும் கருவிகள், மிதவை மற்றும் மூழ்கும் மீன் உணவு தயாரித்தல், காய வைத்தல், மீன்

உணவின் தரக்கட்டுப்பாடு, உற்பத்தி செலவின கணக்கீடு குறித்த தொழில்நுட்ப வகுப்பு மற்றும் செயல்விளக்கப் பயிற்சிகள் அளிக்கப்படும்.

பயிற்சியில் கலந்துகொள்ள விருப்பம் உள்ள தொழில் முனைவோர் மற்றும் இதர நபர்கள் செப். 29ஆம் தேதி மாலை 5 மணிக்குள் பேராசிரியர் மற்றும் தலைவர், கடல்சார் நீர்வாழ் உயிரின வளர்ப்புத் துறை, மீன்வளக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், தருவைகுளம், தூத்துக்குடி - 628 105 என்ற முகவரியிலோ அல்லது 0461-2277424 மற்றும் 2340554 தொலைபேசி எண்களிலோ தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## விதை பரிசோதனை நிலையத்தில் மாநில விதைச் சான்று இயக்குநர் ஆய்வு

தூத்துக்குடி மாவட்ட விதை பரிசோதனை நிலையத்தை மாநில விதைச்சான்று இயக்குநர் ஆய்வு செய்தார்.

கோயம்புத்தூர் விதைச்சான்று மற்றும் அங்கக சான்று இயக்குநர் ஜெயசுந்தர், தூத்துக்குடி விதை பரிசோதனை நிலையத்தில் ஆய்வு செய்தார்.

பின்னர் அவர் கூறுகையில், விவசாயிகள், விதை உற்பத்தியாளர்கள் மற்றும் விதை விற்பனையாளர்கள் தங்கள் கைவசம் உள்ள விதைகளின் மாதிரி எடுத்து இங்குள்ள பரிசோதனை நிலையத்தில் ரூ. 30 கட்டணம் செலுத்தி தங்கள் விதையின் தரத்தை அறிந்து கொள்ளலாம் என்றார். ஆய்வின் போது திருநெல்வேலி விதை பரிசோதனை அலுவலர் அசோக்குமார், வேளாண் அலுவலர்கள் ஜா.ரெனால்ட் ரமணி, த.நெடுஞ்செழியன் ஆகியோர் உடனிருந்தனர்.

## தேனீ வளர்ப்புப் பயிற்சி முகாம்

பதுவையில் வேளாண்துறை தோட்டக்கலை பிரிவு சார்பில் தேனீ வளர்ப்பு குறித்த பயிற்சி முகாம் திங்கள்கிழமைத் தொடங்கியது.

தேசிய தோட்டக்கலை இயக்கத் திட்டத்தின் கீழ் புதுவையில் இரண்டு நாள் தேனீ வளர்ப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது. இதன்படி, புதுவை தாவரவியல் தோட்டத்தில் பயிற்சி முகாம் தொடங்கியது.

தோட்டக்கலைப் பிரிவு வேளாண் துணை இயக்குநர் இரா.சிவபெருமான் பங்கேற்று, தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம் குறித்துப் பேசினார். கூடுதல் வேளாண் இயக்குநர் சீ.ஜெயசங்கர் பயிற்சியைத் தொடங்கி வைத்தார்.

தேனீ வளர்ப்பு பயிற்சியாளர்கள் ஜாஸ்பர், நடேசன் ஆகியோர் தேனீ வளர்ப்பு முறைகள், பயன்கள் குறித்து விவசாயிகளுக்குப் பயிற்சியளித்தனர்.

பயிற்சியில், விவசாயிகள், மகளிர் குழுவினர், அண்ணாமலை பல்கலை. வேளாண் கல்லூரி மாணவர்கள் பலர் கலந்துகொண்டனர். புதுவை வேளாண் அலுவலர்கள் பயிற்சி ஏற்பாடுகளை செய்திருந்தனர். தொடர்ந்து செவ்வாய்க்கிழமையும் இவர்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

**விவசாயிகளுக்கு பட்டா வழங்கல்**

விருத்தாசலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில் விவசாயிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை பட்டா வழங்கப்பட்டது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கடந்த 18ஆம் தேதி நடைபெற்ற விவசாயிகள் குறைகேட்புக் கூட்டத்தில், பட்டா வழங்குவது தொடர்பாக விருத்தாசலம் பகுதி விவசாயிகள் புகார் அளித்தனர். இதையடுத்து மாவட்ட ஆட்சியர் எஸ்.சுரேஷ்குமார் உத்தரவின் பேரில்,

நிலஅளவைத்துறையில் மனு அளித்த விவசாயிகளுக்கு உடனடியாக அளவீடு செய்து திங்கள்கிழமை பட்டா வழங்கப்பட்டது.

விருத்தாசலம் கோட்டாட்சியர் அலுவலகத்தில், கோட்டாட்சியர் செந்தில்குமார், கடலூர் நில அளவை உதவி இயக்குநர் பாண்டியன் ஆகியோர் பெரிய வடவாடி கிராமத்தைச் சேர்ந்த 10 விவசாயிகளுக்கு விவசாய நிலப் பட்டாக்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில், கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர் செழியன், கோட்ட ஆய்வாளர் (பொறுப்பு) ரத்தினவேலு, வட்ட ஆய்வாளர் சேகர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## "கரும்பு விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு; இல்லையென்றால் போராட்டம்'

கரும்பு விவசாயிகள் பிரச்னைக்கு தீர்வு காணவில்லை என்றால் சட்டப்பேரவையை முற்றுகையிடும் போராட்டம் நடத்தப்படும் என புதுச்சேரி கரும்பு விவசாயிகள் சங்கம் எச்சரித்துள்ளது.

அதன் செயலாளர் வே.சங்கர் வெளியிட்ட அறிக்கை:

புதுச்சேரி தமிழகம் உள்ளிட்ட 18 ஆயிரம் விவசாயிகளை உறுப்பினராகக் கொண்ட லிங்காரெட்டி பாளையத்தில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் கடந்த ஆண்டுக்கு முன் ஆலைக்கு வெட்டி அனுப்பிய கரும்புக்கு நிலுவைத் தொகையினை இதுவரை வழங்காமல் உள்ளது.

வங்கிக்கு விவசாயிகள் கட்ட வேண்டிய கடன் தொகையினை ஆலை நிர்வாகம் பிடித்தம் செய்து அந்த தொகையையும் வங்கிக்கு அனுப்பவில்லை.

இதனால் காலம் கடந்த நிலையில் வங்கியில் இருந்து விவசாயிகளிடம் அபராத வட்டியோடு பணம் வசூல் செய்ய நிர்பந்திக்கிறார்கள். மேலும்

நடப்பாண்டு வெட்டி அனுப்பிய கருப்புக்கு விலை நிர்ணயம் செய்யாமல் அரசு காலம் தாழ்த்தி வருகிறது.

கடந்த காலங்களில் சிறப்பாக செயல்பட்டு லாபத்தில் இயங்கிவந்த ஆலை தற்போது மூவர் குழு நியமிக்கப்பட்ட பின்பு நிர்வாகக் கோளாறின் காரணமாக நஷ்டத்தில் இயங்கி வருகிறது.

எனவே மூவர் குழு நிர்வகித்த காலத்தில் பல ஊழல் முறைகேடுகள் நடந்துள்ளதை உயர்நீதி மன்ற நீதிபதியைக் கொண்டு விசாணை நடத்தி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அரியூர் ஈஐடி பாரி சர்க்கரை ஆலை நிர்வாகம் இந்த ஆண்டு சிறப்பு அறவையைத் துவக்காமல் வேறு ஆலைக்கு கரும்பை அனுப்பி உள்ளது. எனவே அறவையை துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

விவசாயிகள் கடந்த ஆண்டு வெள்ளைக்கரும்பு (141) நடவுசெய்து பதிவு செய்து நடப்பாண்டில் ஆலைக்கு வெட்டி அனுப்பியுள்ளனர். ஆனால் தற்போது ஆலை நிர்வாகம் அந்த ரக கரும்புகளை பதிவு செய்வதில்லை என்று மறுத்து வருகிறது. இது சரியான நடவடிக்கை அல்ல.

எனவே புதுச்சேரி அரசு தலையிட்டு விவசாயிகள் நடவு செய்கிற அனைத்துந்க் கரும்புகளையும் பதிவு செய்யவும், காலத்தோடு அரவையை துவக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லை என்றால் அனைத்து விவசாயிகளையம் திரட்டி சட்டப்பேரவை முன்பு போராட்டம் நடத்துவோம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## 28-ந்தேதி டெல்லியில் காவிரி நிர்வாக குழு கூட்டம் பிரதமர் தலைமையில் நடக்கிறது



பெங்களூரு

பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் காவிரி நிர்வாக குழு கூட்டம் 28-ந்தேதி டெல்லியில் நடைபெறுகிறது.

<u>பிரதமருக்கு கடிதம்</u>

தமிழகத்திற்கு காவிரியில் தண்ணீர் திறந்துவிட கர்நாடகத்திற்கு உத்தரவிடுமாறு பிரதமருக்கு தமிழக முதல்-அமைச்சர் கடிதம் எழுதினார். மேலும் கர்நாடக அரசுக்கும் கடிதம் எழுதி தண்ணீர் திறந்துவிடுமாறு தமிழக அரசு கேட்டுக்கொண்டது

மாநிலத்தில் கடும் வறட்சி நிலவுவதால் காவிரி நீர் திறந்துவிடும் பேச்சுக்கே இடமில்லை என்று கர்நாடகம் திட்டவட்டமாக கூறி வருகிறது.

இந்தநிலையில் கர்நாடக நீர்வளத்துறை மந்திரி எம்.பி.பட்டீல் பெங்களூருவில் நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளிக்கையில் கூறியதாவது:-

<u>சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு</u>

"பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் காவிரி நிர்வாக குழு கூட்டம் வருகிற 28-ந்தேதி டெல்லியில் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் கர்நாடகத்தில் உள்ள காவிரி நதி அணைகளின் நீர்மட்டம் குறித்து எடுத்துக் கூறப்படும். இந்த கூட்டத்தில் எடுக்கப்படும் முடிவை பின்பற்ற வேண்டியுள்ளது. இடர்ப்பாட்டு காலத்தில் நீர் பங்கீடு முறை குறித்து காவிரி நடுவர் மன்ற தீர்ப்பில் எதுவும் கூறப்படவில்லை. 2012-13-ம் ஆண்டு சுப்ரீம் கோர்ட்டு வறட்சி காலங்களில் இடர்ப்பாட்டு நீர் பங்கீடு முறையை பின்பற்ற வேண்டும் என்று இடைக்கால உத்தரவு பிறப்பித்தது. இதுகுறித்து சுப்ரீம் கோர்ட்டில் மேல்முறையீடு செய்ய கர்நாடகம் முடிவு செய்துள்ளது. 2006-ம் ஆண்டு காவிரி நிர்வாக குழுவின் முடிவுப்படி அணைகளில் 3.5 டி.எம்.சி. தண்ணீர் பற்றாக்குறையாக இருப்பதால் இடர்ப்பாட்டு முறை பின்பற்றப்பட வேண்டும்."
\இவ்வாறு எம்.பி.பட்டீல் கூறினார்.

**பருவம் தவறிய மழையால் வறட்சி பயம் நீங்கியது முதல்–மந்திரி பட்னாவிஸ் பேச்சு**



மும்பை

மராட்டியத்தில் இந்த வருடம் பருவ மழை பொய்த்ததால் ஏரிகள் தண்ணீர் இருப்பு குறைவாகவே இருந்தது. இதனால் கடும் வறட்சி ஏற்படும் என்ற பயம் மக்களிடையே ஏற்பட்டிருந்தது. இதிலும் வறட்சி பல உயிர்களை குடித்து வந்த மரத்வாடா மண்டலத்தை மேலும் சோகம் ஆள்கொண்டது. ஆனால் கடந்த வாரம் பெய்த பலந்த மழை இந்த வறட்சியில் கோரப்பிடியில் இருந்து மக்களை மீட்டுள்ளது.

இதுகுறித்து மராட்டிய முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இதில் அவர் கூறியதாவது:–

மரத்வாடா மண்டலத்தில் உள்ள பல மாவட்டங்களில் நிலவி வந்த குடிநீர் தட்டுபாட்டை கடந்த வாரம் பெய்த பருவம் தவறிய மழை போக்கியுள்ளது. இந்த மழை காரணமாக வறட்சி பாதித்த பகுதிகளில் அடுத்த வரும் மார்ச் மாதம் வரை மக்களுக்கு தண்ணீர் தட்டுபாடு இன்றி கிடைக்க வழி பிறந்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது.

வறட்சி பாதித்த பகுதிகளில் உள்ள முக்கிய அணைகள் மற்றும் நீர் ஆதாரங்களில் தண்ணீர் அளவு அதிகரித்துள்ளது. தற்போது மரத்வாடா மண்டலத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் கிராமங்களுக்கு டேங்கர்கள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்த டேங்கர்கள் தேவைக்கேற்ப குறைத்துக்கொள்ளப்படும். மேலும் ஹிங்கோலி போன்ற பகுதிகளுக்கு இனி தண்ணீர் டேங்கர்களின் தேவை இருக்காது.

இவ்வாறு தேவேந்திர பட்னாவிஸ் கூறினார்.

## விவசாயிகளின் நிவாரணத்துக்கு நிதி உதவி அளித்த 8 வயது சிறுமி தேவேந்திர பட்னாவிஸ் பாராட்டு



மும்பை,

விவசாயிகளின் நிவாரணத்துக்காக நாக்பூரை சேர்ந்த 8 வயது சிறுமி நிதி உதவி அளித்துள்ளார். அவருக்கு முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் பாராட்டு தெரிவித்தார்.

<u>8 வயது சிறுமி</u>

நாக்பூரை சேர்ந்த 8 வயது சிறுமி ரஷிகா ஜோஷி, விவசாயிகளின் பிரச்சினையை கருத்தில் கொண்டு முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிசை நேற்று மும்பையில் சந்தித்து நிவாரண உதவி அளித்தார். இதற்காக வங்கியில் தான் சேமித்து வைத்திருந்த சொற்ப அளவு பணத்தை அவர் அளித்தார். இருந்தாலும், சிறுவயதிலேயே சமூக சேவையின் மீது அதிக அக்கறை கொண்டுள்ள சிறுமி ரஷிகா ஜோஷிக்கு பாராட்டு மழை குவிகிறது.

அவருக்கு முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் கூறியுள்ள வாழ்த்துச் செய்தியில், ''ரஷிகா ஜோஷி தன்னுடைய வங்கி சேமிப்பு முழுவதையும் விவசாயிகளுக்காக கொடுத்துள்ளார். அவருடைய இந்த திடீர்

பங்களிப்பால் நான் உருகிப்போய்விட்டேன்'' என்றார். இதுபற்றி அவருடைய தந்தை மனோஜ் ஜோஷி நிருபர்களிடம் கூறியதாவது:–

பிரமித்து போய்விட்டேன்

என்னுடைய மகள் ரஷிகா ஜோஷி நடிகர் அமீர்கானின் தீவிர ரசிகை. ஒரு முறை அவர் முதல்–மந்திரியை சந்தித்து, விவசாயிகளின் நிவாரணத்துக்காக காசோலை வழங்கினார். இந்த படத்தை செய்தித்தாள்களின் வாயிலாக பார்த்த என் மகள், நானும் இதுபோல் விவசாயிகளுக்கு உதவினால், என்னுடைய படமும் இவ்வாறு வருமா? என்று கேட்டாள்.

இதற்கு நான் சாதகமான பதில் அளித்ததை தொடர்ந்து, தன்னுடைய வங்கி சேமிப்பு கணக்கில் உள்ள பணம் முழுவதையும் விவசாயிகளுக்கு வழங்க முடிவு செய்துவிட்டாள். மேலும், அவள் முதல்–மந்திரி தேவேந்திர பட்னாவிசை சந்தித்த போது நான் ஊரில் இல்லை. என்னுடைய அண்டை வீட்டார், அவளை அழைத்து வந்திருக்கிறார்கள். ஆனாலும், அவளுக்கு முதல்–மந்திரி தெரிவித்த பாராட்டை பார்க்கும்போது மிகவும் பிரமிப்பாக இருக்கிறது.

இவ்வாறு மனோஜ் ஜோஷி தெரிவித்தார்.

## வேளாண் பொருட்களின் விலை விவரம்



அரியலூர்

அரியலூர் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளைபொருட்களின் விலை விவரம் வருமாறு:– மக்காச்சோளம் (100 கிலோ)– ரூ.1,603, வேப்பவத்தல் (50 கிலோ)– ரூ.773, மிளகாய் (10 கிலோ)– ரூ.629, கடலை (50 கிலோ)– ரூ.2,653, கம்பு (100 கிலோ)– ரூ.1,507. இத்தகவலை வேளாண் விற்பனைக்கூட அதிகாரி குமாரசாமி தெரிவித்துள்ளார். ஜெயங்கொண்டம் வேளாண்மை விற்பனை கூடத்திற்கு வரப்பெற்றுள்ள விளை பொருட்களின் விலை விவரம் வருமாறு:– மணிலா (80 கிலோ)– ரூ.6,511, எள் (80 கிலோ)–ரூ.4,669.

## தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் விவசாயிகள்

வேதாரண்யத்தில் கருகும் சம்பா பயிரை காப்பாற்ற தண்ணீரை விலை கொடுத்து வாங்கும் நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர். கருகும் நெற்பயிர்கள்

நாகை மாவட்டம் வேதாரண்யம் தாலுக்கா கரியாப்பட்டினம், வடமழை மணக்காடு, தாணிக்கோட்டகம், மூலக்கரை, பிராந்தியங்கரை,

தலைஞாயிறு பகுதிகளில் சுமார் 5 ஆயிரம் ஏக்கரில் சம்பா சாகுபடி நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. மேலும் 5 ஏக்கரில் நடவு நடுவதற்காக நாற்றங்கால் தயாரிப்பு பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

கடந்த மாதம் 9-ந் தேதி காவிரியில் தண்ணீர் திறந்தும் இதுவரை கடைமடை பகுதிகளுக்கு தண்ணீர் வந்து சேரவில்லை. தண்ணீர்¢ வராததால் நேரடி நெல் விதைப்பு செய்த நெற்பயிர்கள் கருகி வருகிறது. நாற்றங்கால்கள் தண்ணீர் இன்றி கருகி வருகின்றன. கடைமடை பகுதிக்கு தண்ணீர்¢ கேட்டு பலமுறை சாலை மறியல் போராட்டம் நடத்தியும் இதுவரை கடைமடை பகுதிக்கு தண்ணீர் வந்து சேரவில்லை.

வேதனை

இதனால் விவசாயிகள் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர். மேலும் நாற்றங்காலை காப்பாற்றுவதற்கு கரியாப்பட்டினம் பகுதியில் விவசாயிகள் டேங்கர் லாரி மூலம் தண்ணீரை விலை கொடுத்து வாங்கி தெளித்து வருகின்றனர். ஒரு டேங்கர் லாரி தண்ணீரை ரூ. 1700-க்கு வாங்கும் விவசாயிகள் மிகுந்த சிரமத்துக்குள்ளாகிறார்கள். எனவே கடன் வாங்கி தண்ணீரை விலை கொடுத்து வாங்கி சம்பா சாகுபடியை காப்பாற்ற விவசாயிகள் போராடி வருகிறார்கள். எனவே சம்பா சாகுபடியை காப்பாற்ற உடனடியாக கடை மடை பகுதிக்கு தண்ணீர்¢ விட விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## உப்பூர், திருப்பாலைக்குடியில் உப்பு உற்பத்தி பாதிப்பு



ராமநாதபுரம் மாவட்டம் உப்பூர், திருப்பாலைக்குடியில் இந்த ஆண்டு உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளதாக தொழிலாளர் கள் தெரிவித்துள்ளனர்.

உப்பு உற்பத்தி

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உப்பூர், திருப்பாலைக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சம்பை, பத்தநேந்தல், பெரியசம்பை உள்ளிட்ட பல கிராமங்களிலும் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. 100-க்கும் மேற்பட்ட பாத்திகள் அமைத்து சுமார் 300 தொழிலாளர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து உப்பூர் அருகே பத்தநேந்தல் கிராமத்தை சேர்ந்த உப்பு உற்பத்தி தொழிலாளர்கள் கூறியதாவது:-

ஆண்டு தோறும் பிப்ரவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை உப்பு உற்பத்தி தொழில் நடைபெற்று வருகிறது. உப்பு உற்பத்திக்கு அதிக வெயில்,அதிக வெப்பம் அவசியம். கடந்த ஆண்டு உப்பு உற்பத்திக்கு ஏற்ற தட்பவெட்ப நிலை நிலவியதால் உப்பு உற்பத்தி அதிகமாக இருந்ததுடன் 120 கிலோ எடை கொண்ட 1 மூடை உப்பு ரூ.200 வரை விலை போனது.

பாதிப்பு

ஆனால் இந்த ஆண்டு பருவமழை காலம் தவறி பெய்ததால் உப்பூர், திருப்பாலைக்கு உள்ளிட்ட பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு 120 கிலோ எடை கொண்ட 1 மூடை உப்பு ரூ.140 வரை மட்டுமே விலை போகிறது. இந்த ஆண்டு மட்டும் ரூ.4 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு சரியான தட்ப வெட்ப சூழ்நிலை நிலவியதால் சுமார் 100 டன் வரை உப்பு உற்பத்தி செய்ய முடிந்தது. திருப்பாலைக்குடி, உப்பூர் ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யும் உப்பு வியாபாரிகள் மூலம் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

தினகரன்

**ஸ்ட்ராபெரி சாகுபடியில் விவசாயிகள்ஆர்வம்**

கோத்தகிரி, : கிலோ ரூ.300க்கு விற்பனை செய்யப்படுவதால் ஸ்ட்ராபெரி பழ சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். ஊட்டி, கோத்தகிரி உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த விவசாயிகள் தற்போது ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்ய ஆர்வம் காட்டி வருகின்றனர். குறிப்பாக பசுமை குடில்களை அமைத்து அதில் ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்து வருகின்றனர்.இதுகுறித்து கட்டபெட்டு பகுதியில் ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி செய்து வரும் விவசாயி குணசீலன் கூறியாதவது: நீலகிரி மாவட்டத்தில் ஸ்ட்ராபெரி பழங்களை சாகுபடி

செய்ய ஏற்ற காலநிலை நிலவுகிறது. இங்கு பசுமை குடில்கள் அமைத்து ஸ்ட்ராபெரி நாற்றுகள் நடவு செய்யப்படுகின்றன. இவற்றுக்கு சொட்டுநீர் பாசனம் முறையில் நீர்பாய்ச்சப்படுகிறது. ஒரு வருட பயிரான ஸ்ட்ரா பெரி செடியானது நடவு செய்த 3வது மாதத்தில் காய்க்க தொடங்கிவிடும். பின்னர் ஒரு வருட காலம் வரை வாரத்திற்கு ஒரு முறை என தொடர்ந்து ஸ்ட்ராபெரி பழங்களை பறிக்க முடியும். காய்க்கும் போது பச்சை நிறத்தில் காட்சியளிக்கும் இந்த பழம், பழுத்தவுடன் சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கும். திறந்த வெளியில் ஸ்ட்ராபெரியை சாகுபடி செய்தால் பறவைகள், எலிகள் போன்றவை அதிக சேதத்தை ஏற்படுத்தும். மேலும் வெயில் மற்றும் மழையினாலும் ஸ்ட்ராபெரி செடிகள் பாதிக்கப்படும் என்பதால் பசுமை குடில்கள் அமைத்து அதனுள் சாகுபடி செய்யப்படுகிறது. இதற்கு தேவையான தண்ணீர் மற்றும் உரம், பூச்சிகொல்லி மருந்துகள் சொட்டு நீர்பாசனம் மூலம் அளிக்கப்படுகிறது. இதனால் சாகுபடி செய்ய குறைந்த செலவை ஆகிறது. தற்ோபாது அறுவடை செய்யப்படும் ஸ்ட்ராபெரி பழமானது ஒரு கிலோவிற்கு 300 ரூபாய் வரை விற்பனையாகிறது', என்றார்.

**முட்டை விலை 290 காசுகளாக நிர்ணயம்**




நாமக்கல்: நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில் முட்டை விலையில் 10 காசுகள் குறைக்கப்பட்டு, ஒரு முட்டையின் விலை 290 காசாக நிர்ணயம் செய்யப்பட்டது. கடந்த ஒரு மாதத்துக்கு மேலாக முட்டை விலை 300 காசாக இருந்து வந்தது. புரட்டாசி மாதம் பிறந்துள்ளதால், முட்டை விற்பனை தமிழகத்தில் குறைந்துள்ளது. இதனால் முட்டை விலை குறைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு கிலோ முட்டைக்கோழி விலை 64, ஒரு கிலோ கறிக்கோழி விலை 66 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**2 கோடி மதிப்புள்ள தேயிலை தூள் தேக்கம்**




குன்னூர்: குன்னூர் சிடிடிஏ தேயிலை ஏல மையத்தில் இந்தாண்டுக்கான 38வது ஏலம் நடந்தது. இதில் மொத்தம் 15.84 லட்சம் கிலோ தேயிலை தூள் விற்பனைக்கு வந்தது. இதில் இலை ரகம் 11.29 லட்சம் கிலோ. டஸ்ட் ரகம் 4.55 லட்சம் கிலோவும் அடங்கும். இந்த ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாட்டு வர்த்தகர்கள் அதிகளவில் பங்கேற்று இருந்தாலும் தரமான தேயிலை தூளை மட்டுமே கொள்முதல் செய்ததால் 23 சதவீத தேயிலை தூள் தேக்கமடைந்தது. இதன் மதிப்பு 2 கோடி.

**தமிழகத்திற்கு தண்ணீர் திறந்துவிடுவது தொடர்பாக மோடி தலைமையில் 28ம் தேதி காவிரி நிர்வாக குழு கூட்டம்**




டெல்லி: தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடுவது தொடர்பாக பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் காவிரி நிர்வாக குழு வரும் 28ம் தேதி டெல்லியில் கூடுகிறது. தமிழகத்துக்கு தர வேண்டிய காவிரி தண்ணீரை தர கர்நாடகம் தொடர்ந்து மறுத்து வரும் நிலையில் மேட்டூர் அணையின் நீர் இருப்பு வேகமாக சரிந்து வருகிறது. இன்று காலை நிலரப்படி அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளது. கர்நாடகாவில் தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் வினாடிக்கு 6,197 கனஅடி நீர் வருகிறது. டெல்டா பாசனத்திற்காக அடியில் இருந்து 13,701 கனஅடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் 68.16 கனஅடியாக குறைந்துள்ள நிலையில் மூன்று வாரங்களுக்கு போதுமான அளவு மட்டுமே நீர் இருப்பதால் விவசாயிகள் கலக்கம் அடைந்துள்ளனர். இதனிடையே பெங்களூரில் செய்தியாளர்களிடம் பேசிய கர்நாடக நீர் பாசனத்துறை அமைச்சர் எம்.பி.பார்ட்டிர் பிரதமர் மோடி தலைமையில் வரும் 28ம் தேதி காவிரி நிர்வாக குழு கூட்டம் நடைபெற உள்ளதாக அவர் கூறினார். அந்த கூட்டத்தில் கர்நாடக அணைகளில் நீர்மட்டம் குறித்து விரிவாக பிரதமரிடம் விளக்கப்படும் என்றார் அவர்.

வரட்சியான காலகட்டத்தில் தமிழகத்துக்கு தண்ணீர் திறப்பது குறித்து காவிரி நடுவர் நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்கவில்லை என்று

அவர் கூறினார். எனவே தமிழகத்துக்கு ஒரு சொட்டு தண்ணீர் கூட திறந்துவிட முடியாது என்று பார்ட்டில் கூறியுள்ளார். இதனிடையே கபினி அணையில் இருந்து தமிழகத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டதாக குற்றம் சாட்டி கபினி அணையில் உள்ள நீர் பாசன அலுவலகத்தை கன்னடா அமைப்புகள் முற்றுகையிட்டு போராட்டம் நடத்தி வருகின்றனர்.

**ஜப்பான் மீனவரின் வலையில் சுமார் 6 அடி உயரத்தில் வித்தியாசமான மீன் சிக்கியது**




ஜப்பானில் இம்மாத துவக்கத்தில் டால்பின் மீன்களைப் பிடிக்கும் சீசன் துவங்கியுள்ளது. இந்நிலையில், ஜப்பானிய தீவான ஹொக்கைடோ அருகே சமீபத்தில் மீன் பிடித்து கொண்டிருந்த ஜப்பானிய மீனவரின் வலையில் சுமார் 6 அடி உயரத்தில் வித்தியாசமான மீன் சிக்கியது. இந்த மீனைப் பார்த்தவர்கள், 'இது மீன்தானா அல்லது வேற்று கிரகவாசியா? புகுஷிமா அணு உலை வெடித்ததால் மீனிடம் ஏற்பட்ட மாற்றமா?' என்று ஜப்பானியர்கள் கேள்வி எழுப்பி வருகின்றனர். 'இது உல்ஃப் ரக மீன் வகையை சேர்ந்தது' என்று ஒருசிலர் கூறுகின்றனர். ஜப்பானில் காணப்படும் உல்ஃப் ரக மீன்கள் 4 அடி வரை வளரும், இந்த வினோத

மீனின் அதீத வளர்ச்சிக்கான காரணம் குறித்து தற்போது ஜப்பானிய மீன்வளத்துறை விஞ்ஞானிகள் ஆய்வில் ஈடுபட்டு வருகின்றனர்.

**கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி முகாம்**

பாபநாசம், : பாபநாசம் அடுத்த கபிஸ்தலம் அருகே கருப்பூரில் கால்நடை மருந்தகம், பாபநாசம் லயன்ஸ் கிளப் சார்பில் கால்நடை பாதுகாப்பு மற்றும் கோமாரிநோய் தடுப்பூசி முகாம் நடந்தது. லயன்ஸ் கிளப் மாவட்ட தலைவர் சம்பந்தம் முன்னிலை வகித்தார். கும்பகோணம் கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குனர் மனோகரன் தலைமை வகித்தார். முகாமில் 250 கால்நடைகளுக்கு கோமாரிநோய் தடுப்பூசி போடப்பட்டது. 30 மாடுகளுக்கு சினை ஊசி, 50 மாடுகளுக்கு சினை பரிசோதனை, 100 மாடுகளுக்கு சிகிச்சை, 200 கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. கால்நடை உதவி மருத்துவர் வடிவேலன், ஆய்வாளர் தனலட்சுமி, கலியபெருமாள், உதவியாளர்கள் சாந்தி, முருகேசன், லயன்ஸ் கிளப் தலைவர் முத்தமிழ்ச்செல்வம், செயலர்கள் ஆனந்த் காந்தி, சாப்ஜான், பொருளாளர் ரபீக், பழனியப்பன், பிரபாகரன், செல்வராஜ், பாண்டியன், ராஜா முகமது, அப்துல் சமது, சீனிவாசன், லயனஸ் தில்லை நாயகி கலந்து கொண்டனர்.

தின பூமி

## ரூ.19 கோடி மதிப்பில் வண்ணத்துப்பூச்சி பூங்கா, ஆடவர் விடுதி கட்டிடங்கள்: முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்தார்



சென்னை: தமிழ்நாடு முதல்வர் ஜெயலலிதா தலைமைச் செயலகத்தில், சுற்றுலா மற்றும் கலை பண்பாட்டுத் துறையின் சார்பில் 18 கோடியே 95 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான வண்ணத்துப்பூச்சி பூங்கா, ஆடவர் விடுதிக் கட்டடம், கல்லணை மற்றும் வைகை அணை சுற்றுலா வளர்ச்சிப் பணிகள், மண்டல கலை பண்பாட்டு மைய வளாகங்கள், தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிகளுக்கான கூடுதல் கட்டடங்கள், கலை பண்பாட்டு இயக்கக இரண்டாம் தளக் கட்டடம், அரசு அருங்காட்சியகத்தில் காட்சியமைப்புடன் கூடிய இருப்பறை கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மக்களின் மன மகிழ்வுக்கு மூலக் கூறாகவும், வேலை வாய்ப்பினையும், அன்னியச் செலாவணியையும் ஈட்டித் தருவதில் முக்கியப் பங்கு வகிக்கும் சுற்றுலாவை மேம்படுத்துதல், அரிய கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாத்தல், தொடர்ந்து அதிகரித்து வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை கருத்தில் கொண்டு, புதிய சுற்றுலா மையங்களை தெரிவு செய்தல், சுற்றுலாப் பயணிகளுக்கு தேவையான அடிப்படை

கட்டமைப்பு வசதிகளை உருவாக்குதல் போன்ற பல்வேறு நடவடிக்கைகளை முதல்வர் ஜெயலலிதா அவர்கள் தலைமையிலான அரசு எடுத்து வருவதால், சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக திகழ்ந்து வருகிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் - வண்டலூர், அறிஞர் அண்ணா உயிரியல் பூங்காவில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் கண்டுகளிக்க வசதியாக 6.7 ஏக்கர் நிலப் பரப்பளவில், 60 மீட்டர் நீளம், 26 மீட்டர் அகலம், 6 மீட்டர் உயரத்துடன் கம்பளிப் பூச்சி வடிவில் சூரிய ஒளி உட்புகுந்து தரையில் படும் வகையில் வெண்ணிற மேற்கூரையுடன் கூடிய உள்ளரங்க பாதுகாப்பகம், வண்ணத்துப் பூச்சிகள் வளர்வதற்கேற்ப உள்ள சுற்றுச்சூழலுடன் கூடிய 200 வகை மரம், செடி, கொடிகளுடன் 4 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள வண்ணத்துப்பூச்சி பூங்கா, திருச்சிராப்பள்ளி மாவட்டம், துவாக்குடி மாநில உணவக மேலாண்மை மற்றும் உணவாக்க தொழில் நுட்பவியல் நிறுவனத்தில், 11,237 சதுர அடி கட்டட பரப்பளவில், அறை ஒன்றுக்கு மூவர் வீதம் 60 மாணவர்கள் தங்கும் வசதியுடன் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 20 அறைகள் கொண்ட ஆடவர் விடுதிக் கட்டடம் , தஞ்சாவூர் மாவட்டம் - கல்லணையை பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 3 கோடியே 26 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள காவேரி ஆறு விளக்கக் கூடம், மீன் காட்சியகம், மேம்படுத்தப்பட்ட பூங்கா, தொலைநோக்கி கூடம், குழந்தைகளுக்கான விளையாட்டு சாதனங்கள்;

தேனி மாவட்டம் - வைகை அணையை பார்வையிட வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் மற்றும் உள்ளூர் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் 3 கோடியே 67 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மேம்படுத்தப்பட்ட பூங்கா, மீன் காட்சியகம், கழிவறைகள், மின்விளக்கு வசதி, குழந்தைகளுக்கான விளையாட்டு

சாதனங்கள், மிதி படகுகள், இளைப்பாறும் கூடம், சேலம் மாவட்டம் - தளவாய்பட்டியில், 1 ஏக்கர் நிலப் பரப்பளவில்,

1 கோடியே 7 லட்சத்து 86 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மண்டல கலை பண்பாட்டு அலுவலகம், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், மாவட்ட அரசு இசைப் பள்ளி மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றை உள்ளடக்கிய சேலம் மண்டல கலை பண்பாட்டு மைய வளாகம்; திருநெல்வேலி மாவட்டம் - பாளையங்கோட்டை வட்டம், குலவணிகபுரத்தில் 21,800 சதுர அடி நிலப் பரப்பளவில், 1 கோடியே 13 லட்சத்து 15 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மண்டல கலை பண்பாட்டு அலுவலகம், தமிழ்நாடு ஜவகர் சிறுவர் மன்றம், மாவட்ட அரசு இசைப் பள்ளி மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரியம் ஆகியவற்றை உள்ளடக்கிய திருநெல்வேலி மண்டல கலை பண்பாட்டு மைய வளாகம்; கோயம்புத்தூர் மாவட்டம் - மலுமிச்சம்பட்டியில் 1.06 ஏக்கர் நிலப் பரப்பளவில் 1 கோடியே 89 லட்சத்து 71 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரிக்கான புதிய கட்டடம்;

தஞ்சாவூர் மாவட்டம் - திருவையாறு, தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியில் 6555 சதுர அடி கட்டட பரப்பளவில் 61 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள முதல் தளக் கட்டடம், சென்னை - எழும்பூரில் அமைந்துள்ள தமிழ் வளர்ச்சி வளாகத்தில் 5644 சதுர அடி கட்டட பரப்பளவில் 66 லட்சத்து 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டடப்பட்டுள்ள கலை பண்பாட்டு இயக்கக இரண்டாம் தளக் கட்டடம்,

சென்னை – எழும்பூரில் அமைந்துள்ள அரசு அருங்காட்சியகத்தில் 2530 சதுர அடி கட்டட பரப்பளவில், 63 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் தரை மற்றும் முதல் தளத்துடன் கட்டடப்பட்டுள்ள காட்சியமைப்புடன் கூடிய இருப்பறை கட்டடம்; என மொத்தம் 18 கோடியே 95 லட்சத்து 73 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டிலான சுற்றுலா துறை, கலை பண்பாட்டுத்

துறை மற்றும் அருங்காட்சியகத் துறை கட்டடங்களை முதல்வர் ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

அருங்காட்சியகத் துறை சார்பில் “திருப்புடைமருதூர் சுவரோவியங்கள் மற்றும் மரச் சிற்பங்கள்”, “சென்னை அரசு அருங்காட்சியக அமராவதி சிற்ப காட்சிக் கூட புனரமைப்பு மற்றும் அமராவதி சிற்பங்கள் வேதியியப் பாதுகாப்பு பணிகளின் தொகுப்பேடு” “சென்னை அரசு அருங்காட்சியக படிமங்கள் பற்றிய கையேடு” ஆகிய மூன்று நூல்கள்; தொல்லியல் துறை சார்பில் அரசினர் கீழ்த்திசை ஓலைச் சுவடிகள் நூலகம் மற்றும் ஆராய்ச்சி மையத்தில் உள்ள பழமையான ஓலைச்சுவடிகளிலிருந்து படிக்கப்பட்டு, பதிப்பிக்கப்பட்டு, மறு அச்சிடப்பட்ட சப்தரிஷி நாடியின் “மேஷ லக்கனம்”, “விருஷப லக்கனம்”, “மிதுன லக்கனம்”, “கடக லக்கனம்”, “சிம்ம லக்கனம்” மற்றும் “கன்னியா லக்கனம்” ஆகிய ஆறு நூல்கள், என மொத்தம் ஒன்பது நூல்களை தமிழ்நாடு முதல்வர் புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா அவர்கள் வெளியிட பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கே.சி. வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்ச்சியில், உணவு, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் ஆர். காமராஜ், சுற்றுலாத் துறை அமைச்சர் எஸ்.பி. சண்முகநாதன், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், கே.சி. வீரமணி, தலைமைச் செயலாளர் கு. ஞானதேசிகன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு ஆலோசகர் ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப., (ஓய்வு), சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ரா. கண்ணன், இ.ஆ.ப., இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் முனைவர் மா. வீர சண்முக மணி, இ.ஆ.ப., தொல்லியல் துறை ஆணையர் / கலை மற்றும் பண்பாட்டுத் துறை ஆணையர் முனைவர் தா. கார்த்திகேயன், இ.ஆ.ப., சுற்றுலாத் துறை ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை

இயக்குநர் ஹர் சஹாய் மீனா, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சிறந்த சுற்றுலா தலமாக தரங்கம்பாடி தேர்வு: ஜனாதிபதி பிரணாப் விருது வழங்கி கவுரவிப்பு**

புது டெல்லி: சிறந்த சுற்றுலாத் தலமாக தமிழகத்தில் உள்ள தரங்கம்பாடி தேர்வு செய்யப்பட்டு விருது வழங்கப்பட்டது. ஒவ்வொரு ஆண்டும் மத்திய சுற்றுலா துறை அமைச்சகம் சுற்றுலா துறையின் சாதனைகளை பாராட்டி தேசிய சுற்றுலா விருதுகளை வழங்கிறது. இந்த ஆண்டுக்கான விருதுகள் வழங்கும் விழா டெல்லி விஞ்ஞான் பவனில் நேற்று நடைபெற்றது. இதில் குடியரசு தலைவர் பிரணாப் முகர்ஜி கலந்து கொண்டு விருதுகளை வழங்கினார். இதில், மத்திய சுற்றுலாத் துறை 2013-14-ம் ஆண்டுக்கான தேசிய சுற்றுலா விருதிற்கு, 'சிறந்த குடிமை மேலாண்மையை பேணும் சுற்றுலாத்தலம்'என்ற வகையில் தமிழ்நாட்டிலுள்ள தரங்கம்பாடி தேர்வு செய்யப்பட்டு உள்ளது.

இதற்கான விருதை தமிழக சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை மற்றும் கூடுதல் தலைமை செயலாளரான ரா.கண்ணன், சுற்றுலா ஆணையர் மற்றும் நிர்வாக இயக்குனர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழக நிர்வாக இயக்குனரான ஹர் சஹாய் மீனா ஆகியோரிடம் குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி வழங்கினார். சுற்றுலாத் துறையில் வளர்ச்சிக்கான விருது, மற்றும் சிறந்த ஊரக சுற்றுலா திட்டங்களுக்கான விருது குஜராத் அரசுக்கு வழங்கப்பட்டது.

கிளாஸ் எக்ஸ் பிரிவில் டெல்லி, கிரேட்டர் மும்பை, ஹைதரபாத், பெங்களூரு உள்ளிட்ட விமான நிலையங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. இதில் மிகச்சிறந்த விமான நிலையத்திற்கான விருது டெல்லி இந்திரா காந்தி விமான நிலையத்திற்கு வழங்கப்பட்டது. குறிப்பாக, சுற்றுலா பயணிகளுக்கு ஏற்ற கட்டுமான வசதிகள்,

பராமரிப்பு, சுற்றுச்சூழலுக்கு உகந்த பயன்பாடு, விமான நிலையத்தில் இருந்து அருகில் உள்ள நகரங்களுக்கு சிறந்த வாகன வசதிகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வசதிகள் உள்ளிட்ட 7 முக்கிய கூறுகள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட்டன. இந்த விருதை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வழங்கினார்.

Facebook Twitter

**ஸ்டெம் செல் தானமளிப்பவர்ளின் பதிவகமான தாத்ரி 100,000 பதிவுகளை கடந்து சாதனை!**

இந்தியாவின் மிகப்பெரிய ஸ்டெம் செல் தானமளிப்பவர்களின் பதிவகமான தாத்ரி, தாலசீமியா, லுக்கேமியா மற்றும் ரத்தம் தொடர்பான பிற கோளாறுகளினால் பாதிக்கப்பட்டு, தங்களுக்கு பொருத்தமான ரத்த ஸ்டெம் செல் தானமளிப்பவரை தேடுகின்ற நோயாளிகளுக்கு உதவும் நோக்கில் தொடங்கப்பட்ட அமைப்பாகும்.

சென்னையை தலைமையகமாகக் கொண்டு, லாபநோக்கமின்றி இயங்கிவரும் தாத்ரி அமைப்பில், இந்தியா முழுக்க ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்துள்ளனர். உலக மஜ்ஜை (stem cell) தானமளிப்பவர் தினத்தையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழகத்தில் இதுவரை 16,000த்துக்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்துள்ளனர் என்று தாத்ரி அமைப்பு அறிவித்தது.




சென்னை தரமணியில் உள்ள வி.ஹெச்.எஸ், கே.எஸ்.சஞ்சீவி அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தாத்ரி அமைப்பின் இணை-நிறுவனரும், தலைமை நிர்வாக அதிகாரியுமான ரகு ராஜகோபால், அப்போலோ மருத்துவமனையின் குழந்தைகளுக்கான ரத்தநோய் மற்றும் புற்றுநோய் மருத்துவர் ரேவதி ராஜ், ரோட்டரி சென்ட்ரல் - டி.டி.கே., வி.ஹெச்.எஸ் ரத்த வங்கியின் இயக்குநரான பாலசுப்ரமணியன், வி.ஹெச்.எஸ் மருத்துவர்களான ஜானகி மற்றும் மைதிலி ஆகியோர் பங்கேற்று பேசினர்.தாத்ரி அமைப்பு ஒரு லட்சம் பதிவுகளை பெற்றுள்ளது மிகவும் மகிழ்ச்சி அளிப்பதாக கூறிய ரகு ராஜகோபால், இன்னும் மூன்று ஆண்டுகளில் பத்து லட்சம் பதிவுகளை பெறும் இலக்குடன் செயல்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். மருத்துவர் ரேவதி ராஜ், ஸ்டெம் செல் தானமளிக்க அனைவரும் முன் வர வேண்டும் என்றார்.




சிகிச்சை பெற்ற குழந்தைகளின் தந்தைகளும் தங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொண்டனர். எட்டு வயதாகும் தனது மகளுக்கு வி.ஹெச்.எஸ் சார்பாக இலவசமாக ரத்த பரிமாற்றம் செய்யப்பட்டதாக கூறிய ஷேக் அப்துல் ரகுமான், தாத்ரி அமைப்பின் மூலம் தானமளிப்பவரை பெற்று, ஸ்டெம் செல் மாற்று சிகிச்சைக்குப் பின் தனது மகள் மகிழ்ச்சியுடன் பள்ளிக்கு செல்வதாகவும் கூறினார்.

குஜராத் மாநிலத்தை சேர்ந்த அதுல் குமார் என்பவர், தனது ஏழு வயது மகளுக்காக, பல மாநிலங்களில் சிகிச்சைக்காக அலைந்ததாகவும், பின் தாத்ரி அமைப்பின் மூலமாக தானமளிப்பவரை பெற்றதாகவும் கூறி தன் மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.



மேற்கு வங்க மாநிலத்திலிருந்து வந்திருந்த தீபங்கர் சக்ரவர்த்தி, தனது மகனுக்கான பொருத்தமான தானமளிப்பவரை தாத்ரி அமைப்பின் மூலம் தேடிக் கொண்டிருப்பதாக கூறினார். அவர், தாத்ரி அமைப்பிற்காக உழைக்க விரும்புவதாகவும் கூறினார்.

ஸ்டெம் செல் தானமளித்த விமல் ஃபெர்னான்டஸ் பேசுகையில், தனது தாயே தன்னை தானமளிக்க ஊக்கப்படுத்தியதாக கூறி பெருமைபட்டார். பூரண உடல் பரிசோதனை மேற்கொண்டு, தான் ஆரோக்கியமாக இருப்பதை உறுதி செய்த பின் தான், தான் தானமளித்ததாக கூறினார். அதுதான் தனது வாழ்வின் மிகவும் மகிழ்ச்சியான தருணம் என்றும், விமல் கூறினார்.

நிகழ்ச்சியின் இறுதியில் “ஈதல்” எனும் குறும்படத்தின் குறுந்தகடு வெளியிடப்பட்டு, அந்த குறும்படம் ஒளிபரப்பப்பட்டது.

18 வயதிளிருந்து 50 வயது வரை உள்ளவர்கள் ஸ்டெம் செல் தானத்திற்கு பதிவு செய்யலாம். 60 வயது வரை தானம் செய்யலாம். இதன் மூலம் நாமும் ஓர் மனிதனின் உயிரை காப்பாற்றலாம் தானே!

**ஆல்சைமர் நோய்: 2050 ல் காத்திருக்கும் ஆபத்து!**

2005ஆம் ஆண்டு அமிதாப் பச்சன் நடிப்பில் வெளிவந்த பிளாக், அஜய் தேவ்கன் நடித்து, இயக்கி 2008ல் வெளிவந்த யூ மி ஔர் ஹும், கதை நாயகியாக ஆஷா போஸ்லே நடித்து 2013ல் வெளிவந்த மாய், சமீபத்தில் தமிழகம் கொண்டாடிய ஓ காதல் கண்மணி படங்களுக்கெல்லாம் ஒரு தொடர்பு உள்ளது என்றால், எல்லோரும் மூளையைக் கசக்கி யோசிப்போம். ஆனால் அந்தப் படங்களிடம் உள்ள ஒற்றுமையே யோசிக்கும் திறனைக் குறைத்து, மனிதனை ஒரு உயிருள்ள பிணமாய் மாற்றும் ஆல்சைமர் நோய் பற்றியது என்பதுதான்.


இன்று, செப்டம்பர் 21 - உலக ஆல்சைமர் விழிப்புணர்வு தினம். பல்வேறு தொண்டு நிறுவணங்களும் ஆல்சைமர் விழிப்புணர்வை உலகம் முழுதும் ஏற்படுத்தி வருகின்றன. இன்று 'கோ பர்ப்பில்' (GO PURPLE) என்ற நிகழ்ச்சியைத் துவக்கி அதன் உறுப்பினர்களும்,மாணவர்களும்,பொது மக்களும் செவ்வூதா (கத்தரி பூளூ) நிறத்தில் ஆடை அணிந்து விழிப்புணர்வு ஏற்படுத்தவுள்ளனர். நம்மில் எத்தனை பேருக்கு ஆல்சைமர் பற்றித் தெரியும். நாம் அறிந்து கொள்ள வேண்டியது என்ன?



**ஆல்சைமர்**


உலக மக்களின் மரணத்திற்கான காரணங்களில் இந்த நோய் பெற்றிருக்கும் இடம் ஆறு. கொஞ்சம் கொஞ்சமாய் மூளையின் செல்களை சிதைத்து, ஞாபக சக்தியைக் குறைத்து, நம்மை நமக்கே மறக்க வைத்துவிடும் இந்த ஆல்சைமர் நோய். 65 வயது தாண்டியவர்களை அதிகம் பாதிக்கும் இந்நோயைப் பற்றி 1906 ல் ஜெர்மனியைச் சார்ந்த மருத்துவரான அலோயிஸ் ஆல்சைமர் உலகுக்கு எடுத்துரைத்தார். அமெரிக்காவில் மட்டும் 54 லட்சம் பேரை பாதித்துள்ள இந்த ஆல்சைமர், தற்சமயம் உலகம் முழுவதும் காவு வாங்கியுள்ள மூளைகளின் எண்ணிக்கை சுமார் 4 கோடியே 70 லட்சம்.

இந்த நோய் பாதித்தவர்களால் எதையும் ஞாபகம் வைத்துக் கொள்ள இயலாது. தாங்கள் பழகிய முகங்களையே மறந்து விடுவார்கள். அவர்களால் எந்த ஒரு சூழ்நிலையையும் சமாளிக்க முடியாது. முடிவுகள் எடுக்க சிரமப்படுவார்கள். தங்களைத் தாங்களே மறக்கத் தொடங்குவார்கள். பிறரது உதவியின்றி அவர்களால் செயல்பட முடியாது. இப்படி கொஞ்சம் கொஞ்சமாக சிதையுண்டு கடைசியில் மரணத்தை கைபிடிப்பார்கள்.



## இந்நோய் வருவதற்கான காரணம் என்ன?

ஆல்சைமர் நோய் பொதுவாக மரபு வழியில்தான் ஒருவரைத் தாக்குகிறது. இந்நோய் உள்ளவர்களில் 70 சதவிகிதம் பேர் மரபு வழியில்தான் பாதிக்கப்பட்டுள்ளனர். அமிலாய்டு ப்ரிகர்சர் புரோட்டீன், ப்ரிசெனிலிஸ் 1, ப்ரிசெனிலின்ஸ் 2 ஆகிய ஜீன்களில் ஏற்படும் மரபணு மாற்றமே இந்நோய்க்கான முக்கிய காரணமாகக் கருதப்படுகிறது. அடிக்கடி தலையில் ஏற்பட்ட காயங்களாலும், மன அழுத்தம் காரணமாகவும், அதிக கோபப்படுவதாலும் கூட ஆல்சைமர் நோய் தாக்கப்படலாம் என்கின்றனர் மருத்துவர்கள்.




## எப்படி அறிந்து கொள்வது?

இந்நோய் தாக்கியவர்களால் எந்தவொரு புதிய விஷயங்களையும் ஞாபகம் வைத்திருக்க முடியாது. கஜினி சூர்யாவைப் போல் எந்தவொரு விஷயத்தையும் உடனே மறந்து விடுவார்கள். பழைய விஷயங்களையும் அவர்களால் அதிகமாக நினைவுபடுத்த முடியாது. ஒரு பொருளை எங்காவது வைத்துவிட்டு தேடுவார்கள். சில சமயங்களில் அவர்களுக்கு என்ன தேவை என்றே அவர்களுக்குத் தெரியாது.

இதனை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடத்தை மதிப்பீடுகளும், அறிதிறன் சோதனைகளும் செய்யப்படுகின்றன. CT,MRI,SPECT,PET

போன்ற பல வகையான ஸ்கேன் முறைகள் செய்தே இதை உறுதிபடுத்த முடியும்.

## எப்படி சரிசெய்வது?

இதில் மிகவும் மோசமானது என்னவென்றால் இந்நோயை குணப்படுத்த இன்னும் மருந்துகள் கண்டுபிடிக்கப்படவில்லை. இந்நோயின் தீவீரத்தை சற்று குறைக்க முடியுமே ஒழிய, இதை குணப்படுத்தும் முறையினை விஞ்ஞானிகளால் இன்னும் கண்டுபிடிக்க முடியவில்லை. டோனெபெசில், கலன்டமைன் போன்ற மருந்துகள் மூலம் இந்நோயின் தீவிரத்தைக் குறைக்க முடியும். வயதான காலத்தில் கொலஸ்ட்ரால், உடல் பருமன் போன்றவற்றை தவிர்ப்பதும் உடலுக்கு நல்லது.

## இவர்களும் மனிதர்கள்தான்

இந்நோய் பாதித்த பலரும் தங்கள் பிள்ளைகளால் கைவிடப்படுகின்றனர். முதியோர் இல்லங்களிலோ அல்லது அநாதையாக ரோட்டிலோதான் பலரும் தங்கள் கடைசி காலத்தைக் கழிக்கின்றனர். அவர்களால் தமக்கு எந்தப் பயனும் இல்லை என்பதுதான் இந்த அலட்சியத்துக்கான காரணம். உண்மைதான். அவர்களால் நமக்கு நிச்சயமாக ஒன்றும் வந்துவிடப்போவதில்லை. ஆனால் நாமும் அந்த நிலமைக்கு வரத்தான் போகிறோம். ஆம். 2050 ஆம் ஆண்டில் உலகில் 100 கோடி பேர் ஆல்சைமர் நோயால் பாதிக்கப்பட்டிருப்பார்கள் என்கின்றது ஒரு அறிக்கை.

தற்போது இந்தியாவில் 40 லட்சம் மக்கள் இந்நோயோடு வாழ்ந்து வருகிறார்கள். இந்த எண்ணிக்கை 2030ல் இரட்டிப்பாகலாம் என்கிறார்கள் நிபுணர்கள். அன்றைய தினம் நாமும் இந்நோயால் பாதிக்கப்பட்டிருக்கலாம். நம்மை யார் பாதுகாப்பது? முற்பகல் யாருக்கேனும் நன்மை செய்திருந்தால் தானே பிற்பகல் நமக்கு திரும்ப வரும். அதற்காகவாவது இன்று ஆல்சைமரால் பாதிக்கப்பட்டவர்களை

புறம் தள்ளாமல் நம்மோடு ஒருவராகக் கருதி, அவர்களைப் பாதுகாப்போம்.

நவீன யுக காதலையும், ரஹ்மானின் இசையையும் ஒகே கண்மணியில் கண்டு ரசித்த இளைஞர்களே, அப்படத்தில் தோன்றிய பவானியின் காதலையும் கஷ்டத்தையும் கூட பாருங்கள். அவர்களுக்கும் சொல்ல முடியாத ஆசைகளும், வெளிக்காட்ட முடியாத பாசமும் உண்டு. அதை உதாசீனப்படுத்தாதீர்கள். நாம் ஆல்சைமரை ஒழிக்கப் பாடுபட வேண்டாம். அதனால் பாதித்தவர்களுக்கு பாசம் காட்டினாலே போதும்...!

தி இந்து
தமிழால் இணைவோம்

**ஆற்றுப்பாசன விவசாயிகளுக்கு கைகொடுக்கும் மாம்பழத்துறையாறு_**



கன்னியாகுமரி மாவட்டத்தில் தண்ணீர் தட்டுப்பாடு நிலவும் காலத்தில் வேளாண் தேவையை பூர்த்தி செய்யும் நீர்த்தேக்கமாக மாம்பழத்துறையாறு உள்ளது. வில்லுக்குறி முதல் முட்டம் வரையுள்ள ஆற்றுப்பாசன விவசாயிகளுக்கு கைகொடுக்கும் இந்த அணை சுற்றுலா தலமாக மாறி வருகிறது.

**நீர்த்தேக்கம்**

கன்னியாகுமரி மாவட்ட மக்களின் முக்கிய நீர்ஆதாரமாக பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகள் உள்ளன. மேலும் பொதுப்பணித்துறை நீர்ஆதாரத்துக்கு சொந்தமான 2040 குளங்களும் விவசாயத்துக்கு பக்கபலமாக விளங்குகின்றன.

வில்லுக்குறி அருகே உள்ள மாம்பழத்துறையாறு அணை, மேற்கு தொடர்ச்சி மலையில் இருந்து வரும் தண்ணீரை தேக்கிவைக்கும் இயற்கை எழில்சூழ்ந்த நீர்த்தேக்கமாக விளங்குகிறது.

பிற அணைகளில் தண்ணீர் இல்லாத நேரத்தில் வேளாண் தேவையை பூர்த்தி செய்யும் பெருமை மாம்பழத்துறைக்கு உண்டு. 44 மில்லியன் கனஅடி கொள்ளளவு கொண்ட இந்த நீர்த்தேக்கத்தால் வில்லுக்குறியில் இருந்து முட்டம், ராஜாக்கமங்கலம் வரை உள்ள இரட்டைக்கரை சானல் பகுதிகள் பசுமையுடன் காட்சி அளிக்கின்றன.

பேச்சிப்பாறை, பெருஞ்சாணி அணைகளில் இருந்து இப்பகுதிக்கு தண்ணீர் கிடைத்தாலும், அங்கிருந்து தண்ணீர் கிடைக்காத நேரங்களில் மாம்பழத்துறையாறு கைகொடுக்கிறது. பத்மநாபபுரம் புத்தனாறு இரட்டைகரை, வலதுகரை கால்வாய், வள்ளியாற்று பகுதி விவசாயிகளுக்கு மாம்பழத்துறையாறு மிகுந்த உதவிகரமாக விளங்குகிறது. பிற அணைகளில் தண்ணீர் வற்றி தட்டுப்பாடான நேரத்தில் மட்டுமே மாம்பழத்துறையாறில் இருந்து தண்ணீர் திறக்கப்படுகிறது.

**மகத்தான பலன்**

பொதுப்பணித்துறை நீர்ஆதார செயற்பொறியாளர் சுப்பிரமணி கூறும்போது, ‘ஆற்றுப்பாசன விவசாயிகளுக்கு உரிய நேரத்தில் தண்ணீர் விநியோகிக்க மாம்பழத்துறையாறை பயன்படுத்தி வருகிறோம். சிறிய நீர்த்தேக்கம் என்றாலும், இதன் பலன் மகத்தானது. முட்டம் சானலுக்கு உட்பட்ட கடைமடை பகுதியான உரப்பனவிளைக்கு அறுவடை பருவத்தில் உள்ள நெற்பயிர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை என, விவசாயிகள் புகார் தெரிவித்தனர். இதையடுத்து நேற்று முன்தினம் மாம்பழத்துறையாறில் இருந்து விநாடிக்கு 50 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

இன்னும் ஓரிரு நாளில் அதே இரட்டைகரை சானலின் ராஜாக்கமங்கலம் பகுதிக்கும் மாம்பழத்துறையாறு தண்ணீர் விநியோகம் செய்யப்படும். மாம்பழத்துறையாறு அணையைக் காண சுற்றுலா பயணிகள் அதிகமாக வரத்தொடங்கியுள்ளனர். அணைப் பகுதிகளுக்கு சேதம் ஏற்படாதவாறு அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது’ என்றார் அவர்.

மாம்பழத்துறையாறு அணைப் பகுதியை இயற்கை மாறாமல் பராமரிக்க வேண்டும் என்பதே அங்கு வரும் சுற்றுலா பயணிகளின் விருப்பம்.___

www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

# பருவம் தவறிய மழையால் வறட்சி பயம் நீங்கியது: முதல்-மந்திரி பட்னாவிஸ் மகிழ்ச்சி



மும்பை, செப்.22-

மராட்டியத்தில் இந்த வருடம் பருவ மழை பொய்த்ததால் ஏரிகளில் தண்ணீர் இருப்பு குறைவாகவே இருந்தது. இதனால் கடும் வறட்சி ஏற்படும் என்ற பயம் மக்களிடையே ஏற்பட்டிருந்தது. இதிலும் வறட்சி பல உயிர்களை குடித்து வந்த மரத்வாடா மண்டலத்தை மேலும் சோகம் ஆட்கொண்டது. ஆனால் கடந்த வாரம் பெய்த பலத்த மழை இந்த வறட்சியின் கோரப்பிடியில் இருந்து மக்களை மீட்டுள்ளது.

இதுகுறித்து மராட்டிய முதல்-மந்திரி தேவேந்திர பட்னாவிஸ் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். இதில் அவர் கூறியதாவது:-

மரத்வாடா மண்டலத்தில் உள்ள பல மாவட்டங்களில் நிலவி வந்த குடிநீர் தட்டுப்பாட்டை கடந்த வாரம் பெய்த பருவம் தவறிய மழை போக்கியுள்ளது. இந்த மழை காரணமாக வறட்சி பாதித்த பகுதிகளில் வருகிற மார்ச் மாதம் வரை மக்களுக்கு தண்ணீர் தட்டுப்பாடு இன்றி கிடைக்க வழி பிறந்து இருப்பது மகிழ்ச்சியளிக்கிறது.

வறட்சி பாதித்த பகுதிகளில் உள்ள முக்கிய அணைகள் மற்றும் நீர் ஆதாரங்களில் தண்ணீர் அளவு அதிகரித்துள்ளது. தற்போது மரத்வாடா மண்டலத்தில் உள்ள மாவட்டங்கள் மற்றும் கிராமங்களுக்கு டேங்கர் லாரிகள் மூலம் குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வந்தது. இந்த டேங்கர் லாரிகள் தேவைக்கேற்ப குறைத்துக்கொள்ளப்படும். மேலும் இதர பகுதிகளுக்கு இனி தண்ணீர் டேங்கர் லாரிகளின் தேவை இருக்காது என்றார்.

## உப்பூர், திருப்பாலைக்குடியில் உப்பு உற்பத்தி பாதிப்பு



ஆர்.எஸ்.மங்கலம், செப்.22-

ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உப்பூர், திருப்பாலைக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதிகளான சம்பை, பத்தநேந்தல், பெரியசம்பை உள்ளிட்ட பல கிராமங்களிலும் உப்பு உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது.

100-க்கும் மேற்பட்ட பாத்திகள் அமைத்து சுமார் 300 தொழிலாளர்கள் இந்த தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதுகுறித்து உப்பூர் அருகே பத்தநேந்தல் கிராமத்தை சேர்ந்த உப்பு உற்பத்தி தொழிலாளர்கள் கூறியதாவது:-

ஆண்டுதோறும் பிப்ரவரி மாதம் முதல் அக்டோபர் மாதம் வரை உப்பு உற்பத்தி தொழில் நடைபெற்று வருகிறது. உப்பு உற்பத்திக்கு அதிக வெயில்,அதிக வெப்பம் அவசியம். கடந்த ஆண்டு உப்பு உற்பத்திக்கு ஏற்ற தட்பவெட்ப நிலை நிலவியதால் உப்பு உற்பத்தி அதிகமாக இருந்ததுடன் 120 கிலோ எடை கொண்ட 1 மூடை உப்பு ரூ.200 வரை விலை போனது.

ஆனால் இந்த ஆண்டு பருவமழை காலம் தவறி பெய்ததால் உப்பூர், திருப்பாலைக்கு உள்ளிட்ட பகுதிகளில் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டு உள்ளது. இந்த ஆண்டு 120 கிலோ எடை கொண்ட 1 மூடை உப்பு ரூ.140 வரை மட்டுமே விலை போகிறது. இந்த ஆண்டு மட்டும் ரூ.4 லட்சம் வரை நஷ்டம் ஏற்பட்டு உள்ளது. கடந்த ஆண்டு சரியான தட்ப வெட்ப சூழ்நிலை நிலவியதால் சுமார் 100 டன் வரை உப்பு உற்பத்தி செய்ய முடிந்தது. திருப்பாலைக்குடி, உப்பூர் ஆகிய பகுதிகளில் உற்பத்தி செய்யும் உப்பு வியாபாரிகள் மூலம் திருச்சி, தஞ்சாவூர், புதுக்கோட்டை, அறந்தாங்கி உள்ளிட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

**கர்நாடக அணைகளில் இருந்து தண்ணீர் திறப்பு: மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



மேட்டூர், செப்.22–

கர்நாடக மாநிலம் கிருஷ்ணராஜசாகர் அணையில் இருந்து 4 ஆயிரம் கன அடி வீதமும், கபினி அணையில் இருந்து 4,500 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டுள்ளது.

இந்த தண்ணீர் நேற்று இரவு மேட்டூர் அணையை வந்தடைந்தது. இன்று காலை 8 மணி நிலவரப்படி மேட்டூர் அணைக்கு நீர்வரத்து 6 ஆயிரத்து 197 கனஅடியாக உள்ளது. அணையில் இருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கு 13 ஆயிரம் கன அடி வீதமும், கால்வாய் பாசனத்துக்கு 800 கன அடி வீதமும் தண்ணீர் திறக்கப்பட்டு வருகிறது. தற்போது அணையின் நீர்மட்டம் 68.16 அடியாக உள்ளது.

வருகிற 28–ந்தேதி டெல்லியில் பிரதமர் நரேந்திரமோடி தலைமையில் காவிரி மேலாண்மை குழு கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் பதில் சொல்ல வேண்டிய சூழ்நிலை வரும் என்பதால் கர்நாடக அரசு முன்கூட்டியே தண்ணீரை திறந்து விட்டுள்ளது. தண்ணீர் திறப்புக்கு மைசூர் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தினார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

கர்நாடகத்தில் 2 அணைகளில் இருந்து 8 ஆயிரத்து 500 கனஅடி தண்ணீர் திறந்தாலும், காவிரியில் வரும் அந்த நீரை மாதேஸ்வரன்கோவில் குடிநீர் திட்டத்துக்கு தண்ணீர் எடுப்பதால் 6 ஆயிரத்து 197 கன அடி தண்ணீர் மட்டுமே மேட்டூர் அணைக்கு வருகிறது.